V1 No. 46 15 Nov 1928

JL
0:2.11, N28 KM
N28·1·46
189029

Reg. No. M. 2324.

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ளு நவம்பர்மீ 15உ [No. 46.

21 NOV 1928

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	901
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	903
3.	சூர்ப்பநகை R. முத்தையர்	906
4.	தமிழ்ப் பாடம்.	907
5.	வானசாஸ்திரம்	910
6.	காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	911
7.	அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர் B.A.	913
8.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B. L.	915
9.	வர்த்தமானம்.	919

189029

கலா நிலயம்.

அரசியலும் அரவிந்தரும்.

VII

உணர்ச்சியும் உயிரும் அற்றவோர் எந்திரம் போன்றது இவ்வரசியல் தந்திரங்கள், என்று ஸ்ரீ. அரவிந்தர் எடுத்துக்காட்டியதை முன்நாள் கண்டோம். இதனால், அவ்வாட்சிமுறைகளை நடத்திவைக்க அரசின் அங்கத்தினராய் அமைந்துள்ளவர்களும் உணர்வும் உயிரும் அற்றவர்களான வர்களே என்று எண்ணவேண்டா. அரசாங்க உத்தியோகத்தில் முதல்பதவி பெற்றவர்கள் பலர் நுண்ணிய உணர்வும் தெள்ளிய அறிவும் உயிரிற்குரிய ஊக்கமும் உடையவர்களா யிருக்கலாம். ஆனால், இவ்வுணர்வு அறிவு ஊக்கம் முதலியவைகளை உட்செலுத்தி ஓட்டுதற்கு அவர்கள் கையாளும் எந்திரம் இடந்தாராது. அச்சக்கரம் தன்பாட்டில் சுழன்றுகொண்டேயிருக்கும். நூலைத்திரித்து விடுவது ஒன்றே அதன்வேலை. பூச்சிகள் சில தன்னுள் சிக்கி மாய்கின்றனவே என்னும் இரக்கத்தால் நில்லாது. அதைத் தடுப்பதற்கு இட்ட கையை ஒடிக்குமே யல்லாது தன்னைப்பற்றிப் பிறர் என்ன நினைக்கின்றார்கள் என்பதைப் பொருள்படுத்தாது. படுத்துமாயின் அதன் ஓட்டமும் தடைபடும்.

இப்படிப்பட்ட எந்திரத்தை ஒருவன் கையில் கொடுத்து "இதனைக்கொண்டு நீ குறித்த காலத்திற்குள் இவ்வளவு செய்து குவிக்கவேண்டும்" என்று விதித்து விட்டால், அவன் தனக்கு இயற்கையாயுள்ள உணர்வையும் அறிவையும் வைத்துக் கொண்டு என்னசெய்ய இயலும்! சென்ற மாதம் நம் சட்ட சபையில் பாரதியார் பாடல்களைப்பற்றி நிகழ்ந்த சில வார்த்தைகளைப் பத்திரிகைகளில் யாவரும் படித்திருப்பார். ஆனால் அவைகளுக்கிடையே நேர்ந்தவொரு கேள்வியிலும் பதிலிலும் அடங்கியிருக்கின்ற நுண்மை எல்லார் கண்களிலும் பட்டதோ, யாதோ, அறியோம். "பாரதியார் பாடல்கள் மிகவும் சிறப்பும் இனிமையும் வாய்ந்தன வென்பதும், அவைகளை இத்தமிழ் நாடெங்கும் பெரிதும் போற்றிக் கொண்டாடுகின்றார்களென்பதும் இந்தக் 'கவர்ன்மெண்டிற்கு'த் தெரியுமோ?" என்று ஒரு அங்கத்தினர் கேட்டார். இதற்குக் கனம் பிரதம மந்திரி, "இதனைப்பற்றி இக்கவர்ன்மெண்டிற்கு யாதும் 'தகவல்' இல்லை" என்று சிறிதுந்தாழாது பதில் உரைத்துவிட்டார். அந்தக் கேள்விக்குக் 'கவர்ன்மெண்டார்' கூறக்கூடிய பதில் இதனைவிட இயற்கையானது வேறொன்றில்லை. டாக்டர் சுப்பராயன் அவர்களுக்குப் பாரதியார் பாடலின் சிறப்பைப்பற்றித் 'தகவல்' இல்லையென்று எவரேனும் எண்ணுவரோ! வேண்டிய 'தகவல்' இருக்கும். அவரது உணர்வும் அறிவும் அவ்வழிச் சென்றிருத்தல்கூடும். இருப்பினும், அன்னவரே கனம் முதன் மந்திரியாய் அமர்ந்து 'கவர்ன்மெண்ட்' என்னும் அந்த எந்திரத்தை ஓட்டுகின்ற 'அவசரத்தில்' பாரதியார் பாடலைப்பற்றிய 'தகவல்' ஒன்றிற்கும் இடந்தரக்கூடியவரான நிலைமையில் இருந்திலராகையால் அவ்வாறு கூறவேண்டியது

இன்றியமையாததாயிற்று. இவரன்றி அப் பாரதியாரே அந்நிலையிலிருந்தாலும் அவ்வாறே இயம்ப வேண்டி நேரிடும். ஆதலின் அரசியல்முறை எதுவேயாயினும் அதனை நடத்துவோர் எத்திறத்தவராயினும் ஸ்ரீ. அரவிந்தர் எய்திய முடிவு எள்ளளவும் பிறழ்ந்திடா தென்பதற் கையமில்லை.

பொது ஜனங்களின் தன்மை அன்னது; அவர்களுக்குத் தலைவராய் விளங்குபவர் பற்றித் தொடர வேண்டிய நெறியும் மனமும் அன்னது; இவ்விருதிறத்தோரும் குறிவைத்த அரசியலும் அன்னது, எவ்விதம் இத்துறையில் ஊடாடி ஒரு விதநலம் யாருக்கேனும் நாடலாகும் என்று எண்ணுவது என்ன மாயமோ! அரசியல் வாதத் தந்திரங்களால் யார்தருக்குத் தீங்குவிளைந்தால் விளையலாகுமே யன்றி அவர்களுக்கு உண்மையான நன்மைகள் எய்துதற் கில்லையென்பதையே எந்தத் தேசச்சரித்திரமும் உட்புகுந்து நோக்குங்கால் காட்டித் தருகின்றது.

இன்னவாறு அரசியல் பாழ்பட்டமைவாதல், இந்த நாட்டில் அது நடைபெறுகின்ற முறைகளிலுள்ள குறைகளால் நேர்கின்றதென்றும், அக் குறைகளை நீக்கித் திருத்தமுயல்வது தக்கதே என்றும் எண்ணும் எண்ணம், இவைகளின் தன்மைகளை நாமிங்கு இதுகாறும் வகுத்தவண்ணம் மனத்துட்கொண்டவர்களுக்கு எஞ்சி நிலைக்காதென்றே நினைக்கின்றோம். அமெரிக்காவில் எமர்ஸன் என்ற வித்தகர் பல தத்துவங்களைப்பற்றி எழுதிவந்த காலத்தில் அயல் அரசாட்சி ஒன்றுமங்கில்லையே. ஜனங்களுக்குச் 'சுயராஜ்யமே' இருந்தது. அப்படியிருந்தும் அவர் வரைந்த 'இராஜ்யதந்திரம்' என்னுமோர் கட்டுரையில் கீழ்வரும் வாசகங்களைக் காணலாம். அவை முன்னிங்கு நாம் குறித்தவைகளுக்கு இணங்கியிருத்தலால் கருத்துள் கொள்ளத்தக்கன.

" கட்சியின் நோக்கம் வரையில் பார்க்கப்போனால் அயோக்யதை ஒன்றுமில்லாமலிருக்கலாம். அதைச்சேர்ந்த தலைவர்களைப்பற்றியோ இப்படிச் சொல்வதற்கில்லையே. தாங்கள் நடத்திவைக்கின்ற பொதுஜனங்கள் சொன்னபடி கேட்டு அவர் காட்டும் ஊக்கத்தால் வருகின்ற பலனை எல்லாம் தலைவர்களே அனுபவித்துக் கொள்கின்றார்கள். பொதுவாகக்கூறினால், சமயோசிதமாகக் கட்சிகள் சேர்கின்றனவேயல்லாது தர்மக்கொள்கைகளே ஆதாரமாக அவை பிறப்பதும் அரிது."

" கட்சிகளைச் சேர்ந்தவர்கள், நிதானபுத்தியுடையவர்களும் சாமர்த்தியசாலிகளும் மனத்தேர்ச்சி உற்றவர்களும் ஆகிய பெரும்பான்மை அமைகின்றனர். இருந்தாலுமென்ன. யாவர் சுய உரிமைக்கும் இக்கட்சிகள் தம் தோளைக் கொடுப்பதில்லை. உண்மையாய நலமொன்றும் நாடுவதுமில்லை. கொடிய குற்றங்களைத்தான் கடிகின்றனவா! பெருந்தன்மை வாய்ந்த ஆட்சி முறைகளை அனுசரிக்கின்றனவா! மண்டபங்கள் கட்டுவிக்கின்றனவா! காவியங்கள் எழுத வைக்கின்றனவா! கலையுணர்வை வளர்க்கின்றனவா! மதப்பற்றைப் போற்றுகின்றனவா!......கட்சி எதுவாயிருந்தாலென்ன, அது அதிகாரத்திற்குவந்தவுடன் நாட்டின் நலங்களைக் கொண்டு என்ன அநுகூலஞ் செய்துவைக்கின்றது! சாஸ்திர ஆராய்ச்சியிலும் கலைகளின் வளர்ச்சியிலும் தர்மபரிபாலனத்திலும் பெறத்தக்க பயனொன்றும் உலகம் கட்சிகளின் மூலமாய் எதிர் பார்ப்பதற் கில்லையே"

இவ்வாசகங்கள் வருகின்ற எமர்ஸனது கட்டுரை முழுவதும் மொழிபெயர்த்து இப்பத்திரிகையின் இதழ்களில் (89வது, 93வது பக்கங்கள்) முன் தோன்றி இருக்கின்றது. அதனை மீண்டுமோர் முறை நம் வாசகர் படித்துணருமாறு வேண்டுகின்றோம். அவ்வாறு செய்தால், அரசியல் முறைகளைத் திருத்துவதால் ஜனவாழ்க்கை எவ்வகையிலும் திருந்தாதென்பதும், ஜனங்கள் தம் வாழ்க்கையை அன்போடும் அறத்தினோடும் வளர்ப்பதற்குப் பயில்பவரிலை அவர்களுக்குத் தக்கவாறு ஆட்சி முறைகளும் தேசச் சட்டங்களும் தாமே திருந்தி அமையுமென்பதும் தெள்ளிதின் புலப்படும். 'குடியுயரக் கோலுயரும்' என்னும் பழமொழியின் உண்மைக் கருத்தும் இதுவே.

பொதுஜன வாழ்க்கையின் உண்மை இவ்வாறு இருக்க இக்காலம், உலகம் முழுவதும் அரசியல் வாதங்களில் அளவுகடந்து தன் கவனத்தைச் செலுத்தி எய்தவேண்டிய இடத்திற்கு நேர் எதிராக நடக்கின்றதாகின்றது. அவரவர் வரையில் அன்பும் அறமும் உடையவர்களா யிருக்கின்றார்களா என்பதைப் பார்த்துக்கொண்டால் போதும். உலகம் தானே சீருறும். ஆதலின், நாம் தாம் அவ்வன்பும் அறனும் எய்தி, மற்றவர்மாட்டு எய்தனும் செய்வதானால், அவர்களும் அவ்வன்பிற்கு ஆளாகி அறத்திற்கு உறைவிடமாகி வளருமாறு செய்துவிப்ப தொன்றே சான்றோர் கடன். அன்பும் அறமும் தோன்றி, தான் தனக்குற்றார் தன் சாதி தன்தேயம் என்ற சிற்றெல்லைகளைக் கடந்து, எங்குமாய் யாவுமாய் வியாபிப்பதற்கு ஆதாரமாயிருப்பது ஆன்ம உணர்ச்சி. அவ்வான்ம உணர்ச்சி தளராமல் தாங்குதற்கேற்றன செய்யாதார் யாதொன்றும் செய்யாதாரே.

ஆன்ம உணர்ச்சி தெய்வசிந்தனையின் வேறொன்றன்று. எமர்ஸன் செப்புவதும் இது, மகாத்மா காந்தி அடிகள் "கடவுளிற்கு இவ்வுலகில் வழிவிடுங்கள்" என்று விதிக்கும்போது இதனைத்தான் வற்புறுத்துகின்றார். கவிவரர் இரவீந்திரநாதர் விளம்புகின்ற மெய்யுரை இஃது. ஸ்ரீ அரவிந்தர் அவரது ஆரியா என்னும் பத்திரிகை வாயிலாக வேத வேதாந்த உபநிடத கீதை ஆதி ஆதாரங்களைக் கொண்டு ஆன்ம வாழ்க்கையை (Spiritual life) அரிய சொற்களால் விளக்கித் தருவதும் இந்தத் தத்துவமே. செவியுளார் கேட்பர்.

அன்னதன்மையராய மேன்மக்களின் அடிகளை நாடோறும் போற்றித் தொடரும் இக்காலாநிலயத்தின் நினைவும் நோக்கமும் இஃதன்றி வேறன்று. எனினும், மூதறிவு முதிர்ந்த அப்பெரியோர், வாழ்க்கைநலமென்பது ஆன்மவாழ்க்கையே என்றும், அவ்வான்ம வாழ்க்கை என்பது யாதென்றும் இணையிலாப் பெருமையோடு எடுத்தோதுகின்றனர். நம் காலாநிலயம் அன்னவா மெய்யுரைகளை உணர்ந்து, நன்னலம் பெறுதற்கு முதற்படி பாலபாடமாக நின்று, உலகவாழ்க்கைக்கு இன்றியமையாத ஆன்ம உணர்ச்சி எய்துதற்கும் வளர்வதற்கும் கலைகளினழகின் பயிற்சியே என்னுங் கொள்கையோடு வெளிவந்து இவ்வுத்தமர்களின் பணியை ஆற்றமுயல்கின்றது. கலையுணர்வு ஆன்ம உணர்ச்சிக்கு எவ்வாறு முன்பாடமாகு மென்பதைக், "கலாநிலயம் செய்யுங் கருமமும் செயல் வகையும்" என்னும் தலைப்பின் கீழ் எழுதியுள்ள ஒன்பது தலையங்கங்களில் விரிவாக விளக்கித்தந்துளோமாதலால், ஈண்டுமதனை எடுத்தியம்பல் மிகை.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[885-ம் பக்கத் தொடர்ச்சி]

முடிந்தது முடித்தல்.

1. திருக்காளத்திப் புராணம்.

எனவே, சேக்கிழார் எழுதிய தொன்றுதான் அன்பின் கதை என்பதாயிற்று. ஆகவே, அதில் ஓர்எழுத்தை மாற்றினாலும் அது அன்பின்கதை யாகாது வேறொன்றன் கதையாக முடியும் என்பதும் உண்மையாதல் வேண்டும். அவ்வாறானால், மற்றையோர் எழுதிய கண்ணப்பர் கதைகள் உயரிய அன்பின்கதை யாதல் எப்போதும் இல்லையாம். இக்கொள்கை உண்மையென அறியவேண்டின் மற்றைய புலவர்பெருமக்கள் எழுதிய கண்ணப்பர் கதைகளைப் போய்ப் பார்த்துப் படித்தல் இன்றியமையாததாம். திருக்காளத்திப் புராணத்திலும் சீகாளத்திப் புராணத்திலும் கண்ணப்பர்தம் கதை வந்துளது. ஆனால், அக்கதைகள் நாம் அறிந்த கண்ணப்பர் கதையும் அல்ல; அன்பின் கதையும் அல்ல; வேறோர் கண்ணப்பரது கதை என்றே முடிவுகட்டி விடலாம் இதனால் அந்நூல்களுக்கு ஏற்படுவதோர் இழுக்கு ஏதும் இல்லை. வேறுவகையில், மேலான அக்கதையை விளக்குகின்றன என்று ஆறுதல் சொல்லிக் கொள்வோம். நாம் இவ்வாராய்ச்சியால் அறிய வெளிவந்தது சேக்கிழாரின் உயர்வையே அன்றி மற்றையோரின் தாழ்வையன்று. பச்சைமணி ஒருவகையில் உயர்ந்தது. செம்மணி மற்றொருவகையில் உயர்ந்தது. உலகம் பலவிதம், அதில் ஒவ்வொருவர்க் கொவ்வொன் றெளிது. அவ்வாறு எண்ணுவதை விட்டுப் பூனையையும் நாயையும் ஒப்பிடுவதால் வரும் ஊதியம் ஒன்றும் இல்லை. ஆகவே ஏற்றந் தாழ்வொன்றும் கூறாது, முன்னர் நாம் கூறியவற்றையே முடிந்தது முடித்தலாக மற்றைய நூல்களை ஆராயும் வழியாகக் கூறி வற்புறுத்துவோம்.

திருக்காளத்திப் புராணம் என்பது வீரைநகர் ஆனந்தக் கூத்தர் என்ற பெரியார் பாடியதோர் நூலாகும், அதிலே ஐந்தாவது பிரிவாகக் "கண்ணப்பர் சிவகோசாரியார் முத்தியடைந்த அத்தியாயம்" என்பது காணப்படுகின்றது. திருக்காளத்திப் புராணத்தைப் பதிப்பித்த மஹா மஹோபாத்யாயர். ப்ரஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள், இவ்வத்தியாயத்தினைப்பற்றிக் கீழ்வருமாறு ஓர் சிறு குறிப்பு எழுதியுள்ளார்

" இந்த அத்தியாயம், கிடைத்த கை எழுத்துப் பிரதிகளுள், ஒரேபிரதியில் மட்டும் இருந்தமையாலும், இந்த நூலின் முதனூலாகிய வடமொழிப் புராணத்தில் இந்தச் சரித்திரம் காணப் படாமையாலும், இந்த அத்தியாயச் செய்யுள் நடை இந்நூலாசிரியருடைய செய்யுணடையைச் சிறிதும் ஒவ்வாமையாலும், புத்திமானாகிய யாரோ ஒருவர் இடையே இயற்றிச் சேர்த்திருக்கலாமென்று எண்ணுதற் கிடமாக இருந்தமையாலும், இது தனியே பதிப்பிக்கும்படி நேர்ந்தது" (பக்கம் 237)

இக்கதை, இடைச் செருகலாக இருந்தாலும், இனிமையாக இருத்தலின், ஏற்கத் தகுந்ததே யாம். இதனைப் பாடிய பெரியார், தன் பெருமை ஒன்றும் வேண்டாது, ஆனந்தக்கூத்தரது பெரும் பெயர்ப் போர்வையையே போர்த்துஉலகில் புகுந்துலவ வேண்டினர் ஆதலின், அவரது அவா நிறைவேற அவரை அப்பெயர் கொண்டே அழைப்போம்.

" தல புராணங்கள்" என்ற பாகுபாட்டில் அடங்கியதாகும் இத் திருக்காளத்திப் புராணம். அவை, தாம்பேசுதற்கு எடுத்துக் கொண்ட கோயிலைப் புகழ்ந்துபாடி அங்குவந்து வழிபட்டுப் பலர் உயரிய நிலையடைந்து ஓவென வாழ்ந்தனர் என எடுத்துக்காட்டிப் படிப்பவர் மனதைக் கவர்ந்து, அவர்கள் நாவில் அவ்வீட்டின்பத்தைக் குறித்து, நீரூறச் செய்து, அக்கோயிலுக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போதற்கு முயல்வன. அந்த நோக்கத்தை உட்கொண்டுதான் இவ்வத்தியாயத்தின் தலைப்பும் "முத்தியடைந்த அத்தியாயம்" என்று எழுந்தது. இன்பம்பெற்றோரை ஒன்றிரண்டென எண்ணிப் போவதே இந்நூல்களின் இயற்கையாதலின், இந்நூலாசிரியர், கண்ணப்பர் ஒருவர் வீடுபெறுதல் போதாதென்று, சிவகோசரியாரையும் அவரோடு பிணைத்து, இவ்விருவர் பெயராலும் இப்பிரிவிற்குப் பெயரிட்டார். ஆகவே இந்நூலை எழுதவந்தவரது நோக்கத்தில் இருவரும் இக்கதைக்கு இன்றியமையாத் தலைவராக எழுந்து விளங்குகின்றனர். ஆனால் சேக்கிழாரோ எந்த ஊரையும் புகழ்ந்துரைக்க வந்தவர் அல்லர்; எந்தக் கோயிலைப் புனைந்துபாடப் போந்தவர் அல்லர்; அவர் கதைக்குக் கண்ணப்பர் ஒருவரே காணக்கிடையாத தனிப்பெருந் தலைவர் ஆயினர்.

திருக்காளத்திப் புராணக்கதை பெரும்பான்மையும் பெரியபுராணக் கதையையே பின்பற்றிச் செல்கின்றது என முன்னரே குறித்துள்ளோம். ஆனால் இங்கும் அங்கும் இவரோ சிலபுதியன புகுத்தி வையாமல் இல்லை. ஒத்துள்ளனபோல் தோன்றும் பகுதியிலும், உள்ளீடாக உற்று நோக்க, ஒவ்வாதன பலவாய் ஒழிகின்றன. பழையன கழிதலும், புதியன புகுதலும் படித்தறிந்து, ஒத்தனவும ஒவ்வாதனவும் ஒதி உணர்ந்து சேக்கிழாரின் சிறப்பியல்பைச் சிறிது சுட்டிக்காட்டி, இவ்வாராய்ச்சியினை இனிது முடிப்போம்.

பொத்தப்பி நாட்டையும் உடுப்பூரையும் புனைந்து பாடாது நேரே திருக்காளத்தி மலையைப் புகழ்ந்து கூறத் தொடங்குகின்றார் இவ்வானந்தக் கூத்தர்.

பொன்னுமா மணியு மூத்தும் பொருகரி மருப்பும் வீசித்
துன்னும்வெள் ளருவி வீழும் துதைமலர்ப் பொதும்பருடு
மன்னிய இருள்கால் சித்து வளரொளிக் கற்றை கான்று
பன்னக மணிகு லாவு பாங்கரே ஞாங்கர் எங்கும்.

இம்மெனக் கலித்த மேகம் இகலெனக் கனன்று சீறி
மும்மதக் கலுழி வேழம் முறைமுறை மதர்த்துப் பாயும்
வெம்முழைப் பாழிதோறும் வெள்ளுகிர்ப் பகுவாய்ச்சீயம்
தம்மினத் தோடும் கூடித் தனியா சிருக்கும் மாதோ.

முள்ளரிக்குலங்கள்மேய்ந்துமுகரையால்உழுத தொய்யில்
ஒள்ளிய குறிச்சி யாதி உப்பர்தோய் குவட்டின் காறும
தென்னொளி வயிர ராசி திகழவெள் ளருவி எய்க்கும்
கள்ளவிழ்த்தொழுகல்செய்யகதிர் மணிநிரைகள்போலும்.

அடைகிடந் தாப்பி வேங்கை ஆனினைக் கறுவா நிற்கும்
பெடையொடும்பறவைஈட்டம்பெருங்களிஆட்டம் பேணு
விடையொடும்காடாப்பேழ்வாய் விட்டினங்கன்றுக்கூட்டு
குடமடிபொழிர்ததீம்பால்மிருகங்கள்குடிக்கும்அன்றே[ம்

என்று புகழ்கின்றார். ஆனால் இவை எல்லாம் கதையைச் சிறப்பித்தற்காகச் சேக்கிழார் புகழ்ந்துரைத்த புனைந்துரைபோன்று கதையின் உயிர்க்கெனக் கண்டதோர்

உடல்போல் கருத்தைக் கவர்வன அல்ல. ஆனால் சேக்கிழார் கூறியது போலத்தான் நாடும் நகரமும் கூறவேண்டுமென நாம் கூறவில்லை. அதற்கும் இதற்கும் உள்ள வேற்றுமை ஒன்றையே எடுத்துரைக்கின்றோம். இக்கதைக்கு இப்புனைந்துரை ஏற்றதாகலாம். அன்றியும் இருண்ட சோலையினுள்ளே எதிர் பாராதபடி அரவுமணி ஒளி பொழிந்து ஒளிர்வதுபோல வன்பு சிறந்த வேடர் குலத்தில் எதிர்பாராதபடி அன்புசிறந்த கண்ணப்பர் பிறந்தார் என்றும்; வானகத்து இடியினைக் கேட்ட யானைகள் தம்மைப் போன்ற யானைகள் பிளிறுகின்றன என்று எண்ணுவது போல, உயர்ந்த கடவுளாகிய கண்ணப்பரையும் வேடர்கள் தம்மில் ஒருவராக எண்ணினர் என்றும்; விலையுயர்ந்த மணிகள் முடிநின்று அடிவரை பரந்திருப்பது, வெறும் அருவியாகத் தோன்றுதல்போல, உயரிய கண்ணப்பரும் உருவளவில் வேடரில் ஒருவராக விளங்கினார் என்றும்; கன்றுக்கென ஊறும் பாலைச் சுரப்ப மிகுதியால், காட்டிலே தாய்ப்பசு பொழிந்து விட, அதனைப் பல விலங்குகளும் குடிப்பது போலத் தாய் தந்தையார்பால் வைத்த அன்பினைக் காட்டிலே,எல்லாமாய கடவுள்மேல் பொழிந்தார் என்றும்; அப்புனைந்துரைகட்கு இறைச்சிப்பொருள் கூறி ஒருவாறு கதைக்குறுப்பாக நாம் பொருந்தவைத்துக் கொள்ளுதலும் கூடும்.

வெள்ளித் தகடுபோன்ற உச்சியை உடையது காளத்தி மலை. "அங்குள்ள வேடர்க்கரசன் நாகன். அவனிருக்கும் ஊர் உடுப்பூர். படைக்கலம் கற்றவன். ஆளி மொய்ம்பன்" என்று பெரியபுராணம் 2-வது 7-வது 8-வது செய்யுட்களின் கருத்தைத்தழுவித் தமது 5-வது செய்யுளை அமைத்தார். இனி ஒத்த பகுதிகளை இரண்டு நூல்களிலுமுள்ள செய்யுள்களின் எண்களைக்கொண்டே விரிவுரையின்றி எழுதுவோம். மந்திகள் கமுகமாக் குலைகளை அலைத்துக் குதித்துப் பலாமரத்திற் பாய்வதால் தேன் கூடு பெருக்கெடுப்பதுபோலப் பலாப் பழத்தின் சாறு ஆறாகப் பெருகும் அத்துணை வளப்பமுள்ள மருத நிலத்தில் சென்று பொன்னையும் மணியையும் ஆனிரையையும் கவர்ந்துவருமாறு ஆறலைப் படுத்தும் கள்வர்தலைவனை விளித்து விடுத்து, அவன் கொண்டு வந்தனவற்றால் குறையிலாது வாழ்பவன் அந்த நாகன், என்கின்றார் இந்த நூலார். சேக்கிழார் ஆறலைத்தலைக் கூறினாலும் அஃதொன்றே அவ்வேடர்கள் வாழும் வழி என்று கூறுகின்றார் அல்லர். நீர்வளம் நிலவளம் செறிந்த நாட்டிலே நினைப்பன எல்லாம் பெற்று,நின்றும் பாடியும் வாழும் குடிகள் என அவர்களைப் புகழ்கின்றார். ஆறலைத்தலும் அவர்க்கொரு விளையாட்டே என அருமைபாராட்டுகின்றார். ஆனந்தக் கூத்தரோ ஆறலைத்தலே அவர்களது ஆருயிர்காக்கும் அருநெறி என்று நம்மை, நக்கீரர் பாடிய வேடரிடத்தே கொண்டுபோய் விடுகின்றார். (கா.6, 7-பெ 5.) நாகன், நகரும் காடும் புனமும் காத்து, நெடுங்காலமெல்லாம் தந்தையோடிருந்து வந்தான். (கா 7-பெ 43) பிள்ளை யிலாமையினால் முருகனை வழிபட்டு மாசுமறுவற்ற குழந்தையைப் பெற்றான்? (278-பெ, 10-13.)சோபனம் உலகுபோர்ப்பவென அவர்பிறந்ததால் உலகடைந்த நன்மையைப் புகழ்கின்றார். இந்நூலார் திண்ணனெச் சிறுவருக்குப் பெயரிட்டு (கா 9-பெ 17) ஐந்தாண்டானதும் படைக்கலம் கற்பிக்க (கா9-பெ-41) அவரும் கற்றுக் காளமேகமனைய தோற்றத்து மிக்கார். கண்ணப்பர் விளையாடியதைக் கூறவந்த இந்நூலார் அவரது திருமுன்பு விலங்குகள் பகைமை மறந்து ஒழுகியதைப் புகழ்ந்துரைக்கின்றார். புதியதாகப் படைத்துக் கூறியதில் இதுவொன்று,

மரச்செறி விடையே வேடர்மனாரொடும் திண்ணன்மேவ
உரப்பரிக் குருளை கைம்மா முலையுண ஊட்டா நிற்கும்
வரிப்புலிப் பறழைக் காட்டா மடியணில் விடுக்கும் பல்லக்
கருப்பருக் குட்டி தாழக் கவரியுள்ளியு மன்றே.

சிறுவ னிவ்வாறு உலாவி வர, நாகனும் நரைதிரை முதிர்ந்து வேட்டைக்குச் செல்லானாயினான். ஆகவே புள்ளு மாவும் துறுகலும் முழைஞ்சும் தாறும் கலித்தன எங்கும். பறவையும் மாவும் புகுந்து எவற்றையும் அழித்தன. (11கா-43பெ)குறவரும் குடிகளும் நெட்டுயிர்ப் பெறிந்து நாகன் வாயிலில் வந்து முறையிட்டார்கள் (12கா-44பெ) அவன் அப்போது பட்டபாட்டைச் சேக்கிழார் கூறாது அவன் தனது மகனார் மேல்வைத்த அன்பினைக் காட்டிப் புகழ்கின்றார் ஆனந்தக் கூத்தரோ அவன் உதடுதுடிதுடிக்க நக்கு "என் செய்கேன்" என இரங்குவதை விடுத்துரைக்கின்றார். 'தனது பிள்ளையைக் காட்டி விட்டான் நாகன். (கா-13- பெ 45) பின்னர்ப்பிள்ளையை விளித்து வேடர்கள் புலம்பிமுறையிட்டதைக் கூறினான். அம்முறையீட்டில் "நாகிளங்குமரன்" மனதைக் கரைத்து முன்னிய பணிமேல் முடுகச் செய்வது. பாகடு தீஞ்சொற் குறத்தியர்கள், மாக்கள் துவைசிக்கிப் பாணழிய வேலியிலாப்புனத்தே புலம்பித்திகைப்பதே, என்றறிந்து, அஃதொன்றையே நாகன் கூறியதாகக் கண்டுணர்ந்து பாடிய ஆனந்தக் கூத்தர் மறவோர் மனத்தியல்பு அறிந்தவர் ஆவர். அவர்கள் முறையீட்டைக்கூறிய நாகன் அவர்களோடு சென்று, வெளிக்கு வேட்டையாடுவதுபோல் காட்டிவிட்டு வராது 'மனத்தொடு கன்னி வேட்டை ஆடிநீ வருதி' என்றும் வேண்டிக் கொண்டான் (14 - 15 கா - 53 பெ.) திண்ணனாரை அந்நிலையில் அரசனாக்கிய பெருநிலையை ஆனந்தக் கூத்தர் கூறுகின்றார் அல்லர். ஆகவே அரசனாகிய அண்மையில் அரசு துறந்து அன்புருவான அருநிலையையும் கூறுகின்றார் அல்லர்.

" அந்நிலைக் கரிய சீயம் அலங்கரித்தது போல"மணிப்பூண் சாத்தி வெம்படை ஏந்தி முருகனைப் போற்றி விழவு செய்தார் திண்ணனார். காட்டிற்குப் போகவேண்டுதலின் அந்தக் காட்டிலுள்ள கடவுளர் அனைவர்க்கும் பலி யூட்டினார்கள் எனச் சேக்கிழார் அவ்விடத்திற்கும் அப்போதிற்குந் தகுந்தபடி கூறுகின்றார். அதைவிட்டு, ஒன்றே கடவுள் என்ற உயரிய கொள்கையை உடையவர்கள் அவ்வேடர்கள் என ஆனந்தக் கூத்தர் எண்ணி; இவ்வாறு கூறுகின்றார் போலும். விழவு செய்தபின், முரசு முதலியன முழங்க நாய்கள் மருங்கில் குரைத்து வர வேடர்கள் ஓ என்றிரைய, வில்லினோடு காட்டின் மேல் விரைந்து போயினார் திண்ணனார். (கா 16. 17 பெ 57etc. 72etc.)

மங்குல் கண் படுக்கும் காளத்திவரையில் கங்குலொத்திருண்ட காட்டின் வழியெலாம் வெங்கனல் கொளுத்தி எங்கணும் நுழைந்து வானத் திடியென ஆர்த்தனர் வேடர். இதிலே வெங்கனல் கொளுத்துவது இந்நூலார் அறிந்த வேட்டை விரகில் புதியதொன்று. நிற்க, வேடர் பறையடித்துப் பல விலங்குகளை எழுப்பிப் பதைக்கப் பதைக்கக் கொன்றனர் (கா 19-பெ-77) மயிலும் குயிலும் முயலும் மானும் மேதியும் பட்டன. (20 கா-78பெ) உயிர்கள் வேடர் திறல்கண்டே உட்கி ஓடி மஞ்சுறை திருக்காளத்தி வரையினிற் புகுந்தன என்று புதிதாகக் கூறுகின்றார் புதிய நூலார். கண்ணப்பரைக் காளத்தி மலைக்குக் கொண்டுசெல்ல இங்ஙனம் கூறுகின்றார் போலும். எனினும் இதற்குள் குடுமித்தேவரிடம் கொண்டுபோய் விடுகின்றார் இல்லை. மற்றோர் வேட்டை அந்நிலையில் தொடங்குவதாகக் கூறுகின்றார் ஆனந்தக்

கூத்தர். "கடிமதில் சாலம் கோலிக் கண்ணித்தீ பகங்கள் வைத்தாங் கொடிஎறிந்து அதனை மாற்றி உட்சிலைமலி ஏவிச் செடிபடு கடமா வாகி விலங்கெலாம் செகுத்துப் பின்னும் பிடிபடா திரியல் போன வராகத்தைப் பிடித்துக் கொன்றார்." (கா 22-பெ 75. 76. 91) விரைவில் வேட்டையை முடிக்கின்றார் வீரை நகரார். பன்றியைக் கண்ணப்பர் கொன்றதாகச் சிறப்பித்து அவர் திறமையை மெச்சிப்புகழ்கின்றார் சேக்கிழார். ஆனால் ஆனந்தக் கூத்தரோ அனைவரும்சேர்ந்து அதைக்கொன்றதாகக் கூறுகின்றார். வேட்டையில் தன்னுடன் வந்தாரை விட்டுப் பிரிந்து தலைவன் தனித்து ஒரு பன்றியையோ மானையோ தொடர்ந்துசென்று தலைவியை எதிர்ப்பட்டு இன்பந் துய்ப்பது போலக், கண்ணப்பரும் வேடரின் நீங்கி வெம்பன்றியின்பின் சென்று காளத்தி கண்டு காதல்கொள்வதைக் கூறுகின்றார் சேக்கிழார். அந்த அகத்துறை நுட்பம் ஒன்றும் ஆனந்தக் கூத்தர் கூறுகின்றார் இல்லை. காடு ஏன் போகவேண்டும், வேட்டை ஏன் ஆடவேண்டும், பன்றியை ஏன் கொல்லவேண்டும், என்பன ஒன்றும் எமக்கு இந்நூலார் கூறுகின்றார் இல்லை.

இத்திறம் வேட்டையாடி இகலிமாக் குறும்பெறிந்தார். கதிரவன் உச்சிவந்து வடவைபோல்காய்ந்தான். வேடர்கள், திண்ணனாரது அடிபணிந்து "நீர்விடாய் மிக்கது. தசையுண்டு நீர் குடித்து ஊர் அணைவோம்" என்றனர். (24 கா-93 பெ) "தண்ணீர் எங்குண்டு" என்று கேட்டலும் அரை காவதத்தில் "கமலவாவியும், ஐங்குடுமித்தேவுறை பொழிலும் பொன்முகரியும் தயங்கும், என்றனர்" என்கின்றார் ஆனந்தக்கூத்தர். சேக்கிழாரோ திண்ணனாரைப் பொன்முகரிக்கு அழைத்துக்கொண்டு போகையில் திண்ணனாரை எதிரில் நிற்கும் கண்கவர் காளத்தி கருவரையைக் கண்டு களிக்கச்செய்து அவரே "இம்மலை என்ன மலையோ" என்று கேட்கவும் செய்தார். தம்முணர்வற்றுத் தாமாகவே அன்பர் இருவர் ஒன்றுபடுதலை அழகாகக் கூறுகின்றார் சேக்கிழார். இந்நூலாரோ கதையைச் சுருக்கிச் சொல்லிக்கொண்டு போகும் விரைவில் அவற்றை எல்லாம் விரித்துரைக்கின்றிலர். ஆனால், குடுமித்தேவர் என்று சேக்கிழார் கூறுவதை ஐங்குடுமித் தேவர் என மாற்றிக்கூறப் போதிருக்கின்றது. ஒரு தலைக்கு ஐந்துதலை இருந்தும் உயிரில்லாத கதையாக முடிகின்றது. வேட்டை கூறியதன் உட்கோளும் பன்றியைக் கூறியதன் கருத்தும், நீர்நாடி இயற்கையை வியந்து நடந்து நேரே மலையைக் கண்ட தன் நுட்பமும் இக்கதையில் காணக் கிடைக்கவில்லை. இதுநிற்க.

வேடர் எல்லோரும் கூடி முகரி யாற்றங்கரைக்குப் போயினர். "அரணியிலே நெருப்புக்குவித்த துவக்கும் நீர்" என அவரை அங்கு நிறுவிப்போயினார் திண்ணனார் (கா-26 பெ.99) சேக்கிழாரோ காடனும் நாணனும் என்ற இருவர்தான் பொன்முகரிவரை சென்றனர் என்கின்றார். ஏனிவ்வாறு கூறுகின்றார் என்பதனை முன்னரே குறித்துவைத்தோம். இனி ஆனந்தக் கூத்தரது கண்ணப்பர், தத்துவங்களின் நீங்கி உயிரானது கைலைமலை அடைவதுபோல வேடர்களை நீங்கிக் காளத்திமலையை அடைந்தார் (கா 27-பெ 103)

உற்றதத் துவங்களை ஒருங்கு நீத்துயிர்
கொற்றவன் கயிலையைக் குறுகு மாறெனச்
சுற்றிய வீரர்தம் தொகுதி நீக்கியே
பொற்றிருக் காளத்திப் பொருப்பி லேறினான்.

திண்ணனார் வேட்கைமீதூர மலைமேல் செல்கின்ற நிலைக்குத் தத்துவங்களாகிய படிகளின் மீதேறி இறைவனை அடைதலை உவமை கூறுகின்றார் சேக்கிழார். ஆனந்தக் கூத்தரோ அவ்வேட்கை மீதூர்வதற்கு முன்னிருந்த நிலையைக் கூறுகின்றாராதலின் இங்ஙனம் புனைந்துரைக்கின்றார் போலும். எல்லாங்கடந்த இறைவனை அடைதலைக் கூறுகின்றார் சேக்கிழார். ஆனந்தக்கூத்தர் கோயிலின் கதையைக் கூறுகின்றவர் ஆதலின் கைலையோடு நின்றுவிடுகின்றார். மலைக்கு மலை உவமையாதல் ஒன்றே இவ்வுவமையில் எடுத்துக்காட்டுதற்குரியது. இஃது அத்துணைச் சிறப்பினதல்ல என்று நாம் சொல்லவும் வேண்டுமா? இரண்டு பாட்டையும் ஒருசேரப் படித்தால் உண்மை புலனாகிவிடும். இப்பாட்டு நம்மைத் தரையில் இழுத்துச் செல்லச் சேக்கிழார் பாட்டோ நம்மை உயரப் பறக்கச் செய்து இறைவனிடம் கொண்டுபோய் விடுதல் காண்க. இது ஒருபுறம் நிற்க.

நீர் வினாய்த்துணைவரோடும் சிலையோடும் போயினார் திண்ணனார் என்பதோடு அமையாது தொடுகழற்றொடும் போயினார் என்று கூறுகின்ற ஆனந்தக்கூத்தரின் கருத்தாழம் யாமறிந்ததொன்றல்ல. வேட்டையில் வெற்றி பெற்றதை மெச்சுகின்றாரோ? கடவுளை உதைத்த கழலடியைக்கண்டு மெச்சிப்புகழ்கின்றாரோ? பாட்டை நிரப்ப வேண்டுகின்றாரோ? யாமறியோம். புலிபோல மிடுக்குடன் நடக்கும் கொடிய திண்ணனாரைக் குடுமித்தேவரிடம் கொண்டுபோய் வேடர்கள் விட்டனராம் இது பெருந்திணையே போல இருத்தல் காண்க. பெற்றோர் தன்னை ஒருவனுக்கு மணம் செய்து கொடுக்க, அதற்குடன்பட்டு அவனோடு வாழும் வாழ்க்கையில், மணப்பெண்ணானவள், தன் மணாளனையே உயிராகக் கொண்டு வாழ்தல் போல்வது, இந்நூலார் விரித்துரைக்கும் அன்பு வாழ்க்கை. அஃது அன்பினைந்திணை ஆகாதெனச் சொல்லவும் வேண்டுமா? அவர்கள் கொண்டு போய்த் திருமுன்பு உய்க்க இவர் சிறந்த அடியார் ஆயினார். கொடுவரிப்புலி எனக்குறுகு நாயன் முற்றுமாறிப் புனிற்றிளங்கன்று வேட்டுஉயிர்மாறும் ஓர் ஆ என நின்ற நிலையை வற்புறுத்த இங்குப்புலியை உவமையாகக் கொள்கின்றார் இந்நூலார்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்
ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும் ஆகிய
ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றிய
கந்தபுராண வெண்பா
ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.
இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.
விலை ரூ. 4-8-0. வி. பி. சார்ஜ் வேறு.
மானேஜர், கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்

சூர்ப்பநகை.

(889-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வா றழகுவாய்ந்த சீதை தேவலோகத்திலும் பூவுலகிலு மிருக்கின்ற பெண்பாலார் வயிற்றிற் பிறந்தவளல்லள். அமிர்தங் கடையும்போது திருமகளைக் கொடுத்த பாற்கடலை வெல்வதற்குப் பூமி இச்சீதையைக் கொடுத்தது. ஆகலால் இவ்வுலகத்தோர் கொண்டாடும்படி மின் போன்று துவளும் சிற்றிடையுடைய சீதையை நீ கைக்கொண்டு அநுபவிப்பாயாக; பதிலாக யான் களிப்படையுமாறும் உன் புயவலியை உலகோர் காணுமாறும் அவ்விராமனை என்னிடம் பிடித்துத் தருவாயாக.

எந்தாய்! மிக்க தவமுடையோர்க்கும் அவர் விரும்பியதைக் கொடுப்பது விதியே யாயினும், தக்க காலத்தாலல்லது வரத்தக்கது வந்தடையாது. பத்துத்தலைகளும் இருபது புயங்களும் கண்களும், அழகான உருவமும் வலியமார்பும் பெற்ற பலன் நீ இனிமேல்தான் அடையப் போகின்றாய். இத்தன்மை யுடையாளை உன்னிடஞ் சேர்க்கவேண்டு மென்று எடுத்த என்னை அவ்விராமன் தம்பியான இலக்குமணன் இடையேவந்து என் மூக்கு முதலியற்றை அறுத்துவிட்டான். அதனால் என்வாழ்வு முடிந்து போயிற்று. இவ்விவரங்களை உன்பால் வந்து சொல்லிய பிறகு உயிர்விட உறுதி கொண்டேன்;'' என்று கூறினள்.

இராமனை நேரிற்கண்டு அவனது உருவப் படத்தைத் தன் மனப் பளிங்கில் புகைப்படம் (Photo) பிடித்துக் கொண்ட சூர்ப்பநகை, இராவணனுடைய மனமாகின்ற படாத்திற் சொல்லாகிய தூரிசுகோலால் (எழுதுகோலால்) நன்றாகப் பதியுமாறு செவ்வனே உயிர்பெற்றுப் பேசும் உருவப்பட மெழுதிவிட்டாள். சூர்ப்பநகை சீதையின் அழகைக்குறித்துச் சொல்வதை இராவணன் கேட்டதிலிருந்து தான் முன்னொருபொழுதும் அவளை நேரிற் பார்க்காம லிருந்தபோதிலும் பாவனையால், பார்த்ததைவிட மேலான தன்மையனானான். அவனுடைய அகக்கண்ணுக்கெதிரில் சீதையின் வெளியுருவம் நன்றாகப் புலப்பட்டது.

இயற்கையில் ஒருவனுடைய கண்பார்வையில் இயல்பாகப் பட்டபொருள் விரைவில் மறைதல் கூடும். ஆனால் மனதில் சிறப்பாகப்பட்ட பொருள் ஒரு பொழுதும் மறைந்து போகாதென்பது திண்ணம். அதுபோல இராவணனும் சீதையின் உருவத்தைத் தன் மனதில் ஊன்றிப் பதித்துக் கொண்டான். ஆனால் அவளுடைய மனோ நிலைமையைக் கருதினானில்லை. சூர்ப்பநகையும் சீதையின் உயரிய குணங்கள் இராவணனுடைய மனதிற் பட்டால் தான் கொண்ட காரியம் நிறைவேறாதோ வென்று ஐயுற்று அவன் மனதிற்படாதவாறு புனைந்து கூறினாள். அதன்படியே இராவணனும் சீதையின் மனத்திட்பத்தை ஒருங்கே தள்ளிவிட்டு, குணநீத்துக் கோது கொள்வார்போல, அவளுடைய வெளியழகில் ஈடுபட்டுவிட்டான். கம்பர் சீதையினழகைச் சூர்ப்பநகையின் மூலமாக இராவணனுக்கு அறிவிக்க எழுதிய சித்திரத்தின் முறையைச் சிறிது கவனிப்போம்.

சீதையைப் பற்றி இதற்குமுன் புனைந்துகூறிய முறையில் இவ்விடத்திற் கூறவில்லை. சொல்வோனது சொற்சாதுர்யத்தால், சிறிது சிறப்புக் குன்றிய பொருளும், பெரிதும் சிறப்பாவதியற்கை. சீதையோ அவ்வாறில்லை. புகழ்ந்து கூறப்படும் அழகினுக் கழகா யுள்ளவள். கூறுகின்றவரோ கவிச்சக்கரவர்த்தி. சந்தர்ப்பமோவெனில் முன்னொரு முறையும் கண்டிராதவன் மனதில் பசுமரத்தாணிபோற் பதிந்து தன்வயமாக்க வேண்டுமென்னும் ஆவலுண்டாகும்படி நினைவெழவேண்டுவது. இம்முறையிலிருந்து எழுதுகின்ற கம்பரே சூர்ப்பநகை யாய்விட்டார்.

ஓவியத்துறையில் கைபோய ஒருவன் ஓர் உருவத்தைப் படத்திலெழுதுவதற்கு முதலில் உத்தேச படம் (Outline) எழுதுவதைப்போல, சூர்ப்பநகை முதலில் சீதையின் இன்சொல்லையும் கூந்தலின் பெருமையையுங்கூறி, அவளுக்கு அழகிற்கிலக்கான திருமகளையுங் கீழ்மைப் படுத்தி விட்டாள். அதைக்கேட்டு இராவணன் மயங்கியதைக் குறிப்பாலுணர்ந்து ஓவியக்காரன் படத்தினங்கங்கள் துலக்கமாகத் தெரிவதற்கு நுட்பவேலைசெய்வதைப் போல, முன்கூறியவைகளையே உவமைமுகத்தால் மிகைப்படுத்தி அவன் மனதிற் பதியவைத்தாள். பிறகு அவளுடைய அழகைக் கட்டுரைத்துக் கூறுவதற்கு 'அழகுக் குறையுளாகிய மன்மதனே இவளழகைக் கண்டு கூற முடியாத ஆசையால் அழிந்தானென்றால் மற்று வேறென் சொல்வது' என்று கூறினாள். இதைக் கேட்டதும் இராவணன் அவளழகை ஒருவாறு உய்த்துணர்ந்திருத்தல் கூடும். பிறகு 'இவளைப் போன்ற அழகுடையவர் வேறெங்கேயாவது இருக்கமாட்டார்களா' வென்ற எண்ணம் இராவணனுக்குண்டாகுமோ வென்னும் ஐயங்கொண்டு, 'மூவுலகத்திலும் இவளொத்த அழகுடையவர் காண்பதரிது' என்று கூறினள். ஆயின் 'நீ கண்டவளை யான் காணவேண்டிப் படமெழுதிக்கொண்டு வரலாகாதோ' வென்று கேட்பானெனக் கருதி;

> கொந்தார் மணிமேகலை நூல்நுட்பங் கொள்வதெங்ஙன்
> சிந்தா மணியுந் திருக்கோவையும் எழுதிக் கொளினும்
> நந்தா வுரையை யெவ்வா றெழுதுவை நயந்தருளே.

என்றபடி, ஒருவராலும் எழுதமுடியாத அங்கஅமைப்புடையவளென்று கூறி ஒவ்வொரு உறுப்பையுங் குறித்துச் சொல்லித் திகைத்து 'நீயே சென்று காண்' என்று கூறினள்.

ஒருவேளை இராவணன் சென்று சீதையைக் கண்டுவிட்டுத் திரும்பி வந்து விடுவானோ, வென்று மறுபடியு மெண்ணினாள். 'கண்டாற் பலனென்ன; கொண்டாலன்றோ குணம்; இந்திரன், சிவபிரான், திருமால் ஆகிய இவர்கள் தாம் இன்புறுவதற்கு முறையே சசி, உமாதேவி, திருமகளாகிய இவர்களைப் பெற்றதுபோல நீயும் சீதையைப் பெற்றுக்கொள்' ளென்று கூறவெண்ணிய சூர்ப்பநகை அவனது மன நிலையைக் குறிப்பாலறிந்து 'சீதையைப் பெற்றாற்' யென்று கூறினள். மீண்டும் திட்டமாக எடுத்து வரவேண்டு மென்றறிவிப்பதற்கு 'அவர்களனுபவிப்பது இன்பமன்று; நீ யனுபவிப்பதே யின்பமாகும்; தவிர, சிவனும் திருமாலும் பிரமனும் தம் தேவியரை முறையே பாகத்திலும் ஆகத்திலும் நாவிலும் வைத்துக்கொண்டு வாழ்கின்றனர்; நீயவர்களைப் போலன்றிச் சிரோமணியாகக் வைத்துக்கொண்டு வாழ்வாய்; நீயவளைக் கொண்டாயாயின் ஒரு பொழுதும் அவளை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாய்; மற்றைய மனைவியரை விரும்பாமல் கொள்ளைபோகின்ற உனது செல்வமனைத்தையும் அவளுக்கே கொடுப்பாய்; என்றத் தொடக்கத் தனவைகளை அவன் மனப்பான்மைக் கேற்பச் சொல்லித் தான் கொண்ட கொள்கையை நிலைநிறுத்தினள்.

சூர்ப்பநகை சொல்லுகையில் ''ஐய அந்தரம் பார்க்கில் நன்மையவர்க்கு இல்லை யுனக்கே'' என்பதற்குத் 'தேவர்க்கும் உனக்குமுள்ள பேதத்தை நோக்குமிடத்து நன்மை அவர்க்கே தவிர உனக்கில்லை' யென்றும்; 'பெற்றாலெங்ஙனம் வைத்து வாழ்தி' என்பதற்கு 'அவர்கள் அனுபவிக்கத் தகுதியுடையவ ராதலால் வைத்துக் கொண்டு வாழ்ந்தனர்; நீ பெற்றால் எப்படி வைத்து வாழ்வாய்' (வாழமாட்டாய்) என்றும்; 'நின்மனையில் வாழும் கிள்ளைபோன் மொழியார்க்கெல்லாம் கேடுசூழ்கின்றேனன்றே' என்பதற்கு 'உன் அரண்மனையில் வாழும் பெண்டிர்க்கெல்லாம் கெடுதியைச் செய்கின்றேன்' என்றும் உண்மைப் பொருள் படுமாறு அமைத்துப் பாடிவைத்திருப்பதன் நயம் நோக்கிப் பாராட்டத்தக்கது.

இங்ஙனம் சாதுர்யமாகச் சொல்லித் தரிப்பித்து அவளை யெடுத்துக் கொண்டுவந்து இன்புறுவாயென்று சொல்லும் சூர்ப்பநகைக்கு, அச்சீதையின் உருவத்திற்கொத்த ராமனது அழகிய உருவம் நினைவுக்கு வந்தது; உடனே இராவணனிடம் 'அச்சீதை கணவனான இராமனை நான்கொண்டு ஊடாடும்படி எனக்குத் தந்தருள்க' வென்றுகூறி முடித்தாள்.

இவைகளைக் கேட்டதும் இராவணனுக் கேற்பட்ட கோபம் வீரம் முதலியன மாறிக் காமத்தாலுண்டான ஆசைநோய் உயிரோடு கலந்தது. அவ்வாலாறு இராவணன் காதலில் கூறப்படும். இராவணன் காம பரவசனாய் அன்றிரவுப்பொழுதைத் துயரத்திற் கழித்தான். அவனது அகபடாத்திற் கண்ட சீதை அவனெதிரில் வரலாயினள். அத்தோற்றம் உருவெளியென்பதை மறந்து சீதையேயாகுமென் றெண்ணித் தெளிந்தும், நேரிற்கண்ட தங்கையிடமுங் கேட்போ மென்று ஏவலாளரைச் சூர்ப்பநகையை அழைத்துவா அனுப்பினான். "வன்றாள் நிருதர்குலம் வேரற மாய்த்தல் செய்வாள் ஒன்றாத காமக் கனலுட் டெறலோடும் நாசி பொன்றாழ்குழை தன்னொடு போக்கினளும்'', ''பொய் நின்ற நெஞ்சிற் கொடியாளும்'' ஆகிய சூர்ப்பநகை வந்தாள். இராவணன் அவளை நோக்கி, 'நங்காய்! இதோ நிற்பவளன்றோ நீ சொன்ன சீதை' என்று கேட்டான். அதற்கவள்;

> செந்தா மரைக்கண் ணொடும்செங்கனி வாயி னொடும்
> சந்தார் தடந்தோ ளொடும்தாழ்தடக் கைக ளோடும்
> அந்தா ரகலத் தொடும்அஞ்சனக் குன்ற மென்ன
> வந்தா னிவனா கும்அவ் வல்வில் ராமன்

என்று அவன்கேட்டதற்கு நேர் மாறாக, நிற்கின்ற இவனே இராமனாகு மென்றாள். அதுகேட் டதிசயித்த ராவணன், 'பேதையே; நான் கண்டது பெண்பாலுருவாகும்; அவ்வுருவத்தைக் கண்ட நீ ஓரிடமுமில்லாத ஆணுருவ மென்றனையே! பலமாயங்கள் செய்யவல்ல நம்மை மனிதரோ மாயையுட் படுத்தவல்லவர்' என்றான். உடனே சூர்ப்பநகை 'ஐய! நீ உன்னுணர்வை வேறொன்றிலும் செலுத்தாதபடி சீதையினிடஞ் செலுத்தினையாதலின், உன்பார்வை செல்லுமிடங்களெல்லாம் அவளுருவமே தோன்றுவ தியற்கையும் பழைமையுமாகும்; இவ்வாறு காண்பதற்கு உருவெளித் தோற்றமென்று பெயர்' என்றாள். அதற்கிராவணன் 'அங்ஙனமாயின் நீ அவ்விராமனைக் கண்டவா றென்னை' என்றான். அப்பால் சூர்ப்பநகை,

> எந்நாளவன் என்னையித் தீர்வரு மின்னல் செய்தான்
> அந்நாள் முதல் யானும் அயர்த்திலனாகும்

என்று பதிலுரைத்தாள். இராவண னிதைஒப்புக்கொண்டு 'மெய்யோடு உயிரும் நையும்படி மயக்கவினை கொண்ட எனக்கு அநுகூல முண்டாகுமாறு என்ன'வென்று கூறக் கேட்ட சூர்ப்பநகை.

> கோமான் உலகுக் கொருநீ குறைகின்ற தென்னே
> பூமாண் குழலாளை வெளவுதி போதி!

என்று இராவணனையே போய் எடுத்துவரச் சொல்லிவிட்டு அவ்விட மிருந்து போய் விட்டாள்.

கம்பர் தனது இராமாயண அரங்கில் சூர்ப்பநகை நடிப்புக்கு இவ்வளவே இடங்கொடுத்திருக்கிறார். வான்மீகிமுனிவரிடம் கம்பர் பொருளை வாங்கிக் கொண்ட போதிலும் போக்கு வேறுபடுத்திப் பொருள் வேறுபடாமல் செப்பஞ்செய்து அமைத்து மெதுவு படுத்தியிருக்கின்றார். கம்பர், இராமன் முதலியோர் விருத்தாந்தத்தை இராவணனுக்குச் சூர்ப்பநகை மூலமாகவே அறிவித்துச் சீதையை எடுத்துவரச் செய்திருக்கின்றார். வான்மீகிமுனிவரோ கரதூடணாதியர் போரில் பெண் வேடந்தரித்துத் தப்பி ஒளித்து ஓடிய அகம்பனென்னும் அரக்கன்மூலம் இராவணனுக் கறிவித்திருக்கின்றார். இராவணன் தம்மைக் குறைவுபடுத்திய இராமனைச் சிறுமை செய்ய அவன் மனைவியான சீதையை மானைக் கொண்டு மயக்கி எடுத்து வரவேண்டுமென்று துணிந்து மாரீசனிடஞ் சென்று சொல்லி, பிறகு அவன் கூறிய நல்லுரைபெற்றுத் திரும்பிவந்தபின் சூர்ப்பநகை சொல்வதாக வான்மீகத்திற் கூறப்பட்டுள்ளது.

முற்றிற்று. R. முத்தையர்.

தமிழ்ப் பாடம் 46.

நள வெண்பா

(895-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

பிரிந்தகன்ற நளனைத் தேடித்திரிந்த தமயந்தி ஒரு பாம்பின்வாய்ப் பட்டதையும், அவளையொரு வேடன் வந்து மீட்டதையும் இனிவரும் செய்யுள்களில் காண்போம்.

> வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியால்
> மோட்டு வயிற்றரவு முன்றோன்ற—மீட்டதனை
> ஓரா தருகணைந்தா னுண்டே னறற்கூந்தற்
> போரார் விழியாள் புலர்ந்து. 117.

பதப்பிரிவு:—வேட்ட கரியை விழுங்கி பெரும் பசியால் மோட்டு வயிற்று அரவு முன் தோன்ற மீட்டு அதனை ஓராது அருகு அணைந்தாள் உண் தேன் அறல் கூந்தல் போர் ஆர் விழியாள் புலர்ந்து.

அன்வயம்:—வேட்ட கரியை விழுங்கி மோட்டு வயிற்று அரவு மீட்டு பெரும்பசியால் முன் தோன்ற, தேன் உண் அறல் கூந்தல் போர் ஆர்விழியாள் புலர்ந்து, அதனை ஓராது அருகு அணைந்தாள்.

பதவுரை

வேட்ட - (தான்) விரும்பிய
கரியை - (ஒரு) யானையை
விழுங்கி - விழுங்கி
மோட்டு - மோடான
வயிற்று - வயிற்றையுடைய

அரவு - பாம்பு (ஒன்று)
மீட்டு - பின்னும்
பெரும் - பெரிய
பசியால் - பசியோடு
முன் - எதிரே
தோன்ற - வர,
தேன் - வண்டுகள்
உண் - மொய்க்கின்ற
அறல் - கருமணல் (போன்ற)
கூந்தல் - கூந்தலையும்,
போர் - போர்த்தொழில்
ஆர் - பொருந்திய
விழியாள் - விழிகளையும் உடைய தமயந்தி,
அதனை - பாம்பு வருவதை
ஓராது - அறியாமல்
அருகு - (அப்பாம்பிற்கு) அருகே
புலர்ந்து - சோர் வடைந்து
அணைந்தாள் - நெருங்கினாள்.

விரிவுரை:—யானையை விழுங்கியும் அடங்காத பசி பின்னுங் கொண்டிருந்த வொரு பெரும் பாம்பினிற் கருகே சோர்ந்திருந்த தமயந்தி அதனை அறியாமற் சென்றடைந்தாள். அவளையும் பற்றி அது விழுங்கத் தலைப்பட்டது. முன்னரே யானையை விழுங்கி அதன் வயிறு மோடிட் டிருக்காதாயின் பிடித்த இந்தத் தமயந்தியை அது ஒரே வாயாய் விழுங்கிப் போயிருக்கும். அவ்வாறு நிகழாமல், பாம்பின் வாயில் பாதி உடல் முழுகப் பத்தினித் தெய்வமோ இவளென்று நம்மனோர் பரவும்படி அவள் நாயகனைத் தொழுதழைக்கவும், அன்னவளை வேடன் ஒருவன் வந்து காப்பதற்கும், நேரம் தரும் பொருட்டே புகழேந்தி யானையை விழுங்கியிருந்த பாம்பினால் அவளை விழுங்கவைத்தார் போலும்

அங்கண் விசும்பி னவிர்மதிமேற் சென்றடையும்
வெங்க ணரவுபோன் மெல்லியலைக்—கொங்கைக்கு
மேலெல்லாந் தோன்ற விழுங்கியதே வெங்கானின்
பாலெல்லாந் தீயுமிழும் பாம்பு. 118.

பொழிப்புரை:—அக்கொடிய காட்டி லெல்லாம் தீயைப்போன்ற விஷத்தைக் கக்குவதாகிய அப்பாம்பு, அழகிய இடமகன்ற வானத்தில் விளங்குகின்ற சந்திரனைச் சென்று பிடிக்கும் குரூரத்தன்மை பொருந்திய இராகுவென்னும் பாம்பைப்போல், மென்மைத் தன்மை வாய்ந்த தமயந்தியை அவள் முலைவரையில் விழுங்கி விட்டது.

வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவநின்
தாளடைந்து வாழுந் தமியேனைத்—தோளால்
விலக்காயோ வென்றழுதாள் வெவ்வரவின் வாய்க்
கிலக்காகி நின்ருளெடுத்து [கிங் 119

பதப்பிரிவு:—வாள் அரவின் வாய் பட்டு மாயா முன் மன்னவ நின் தாள் அடைந்து வாழும் தமியேனை தோளால் விலக்காயோ என்று அழுதாள் வெம் அரவின் வாய்க்கு இங்கு இலக்கு ஆகி நின்ருள் எடுத்து.

அன்வயம்:—இங்கு, வெம் அரவின் வாய்க்கு இலக்கு ஆகி நின்ருள், "மன்னவ, நின் தாள் அடைந்து வாழும் தமியேனை, வாள் அரவின் வாய்ப்பட்டு மாயாமுன் (உன்) தோளால் விலக்காயோ" என்று எடுத்து அழுதாள்.

பதவுரை.

இங்கு - இக்காட்டில்,
வெம் - கொடிய
அரவின் - பாம்பின்
வாய்க்கு - வாய்க்கு
இலக்கு ஆகி - குறியாகி - இரையாகி
நின்ருள் - நின்றவளாகிய தமயந்தி,
"மன்னவ - வேந்தனே,
நின் - உன்னுடைய
தாள் - பாதங்களை
அடைந்து - (தஞ்சமென) மனதிற்கொண்டு
வாழும் தமியேனை - தனியாய் வாழ்கின்ற என்னை,
வாள் - வாள்போன்ற பற்களையுடைய
அரவின் - பாம்பினது
வாய் - வாயில்
பட்டு - அகப்பட்டு
மாயாமுன் - சாவதன்முன்
தோளால் - (உன்) தோளினால்
விலக்காயோ - விலக்கிக் காக்க மாட்டாயோ"
என்று - என்று
எடுத்து - கூவி
அழுதாள் - அழுதாள்.

விரிவுரை:—தமயந்தி தன் நாயகன்பால் பாராட்டுகின்ற பக்தியின் சிறப்புச் சொல்லுந் தரமன்று. வீரமும் செல்வமும் விளங்கிய வீமராஜனுக்கு ஒருதனிப் புதல்வியாய்ப் பிறந்து, ஒருவித குறைவுமின்றி அரசின் நலங்களெல்லாம் அனுபவித்த அன்னையின் அன்பிற்கிடையே வளர்ந்தவள் இவள். அன்னவளை இந்திரனே வந்து மணம் இரந்து வேண்டினன். அதனிற்கிணங்கி இருப்பாளாயின் எவ்வகைப் பதவி எய்தி யிருப்பாளென்பதை அதிவீர ராமபாண்டியன் நைடதத்தில் வெகு அழகாகக் காட்டியுள்ளார். புகழேந்திப் புலவரின்படி இந்திரன் நளனைமாத்திரம் தன் காதல்தூதனைத் தமயந்தியிடம் அனுப்பினன். ஆனல், நைடதத்திலோ இந்திரனும் மற்றத் தேவர்களும் நளனை அனுப்பினதோடு நில்லாமல், தூதிகள் சிலரையும் தமயந்தியின் காதலைப் பெற்றுவருமாறு அனுப்பிவைத்தனர். அவ்வாறு வந்த தூதிகளில் தேவேந்திரனுடைய தூதி, இந்திரன் அவள்மீது கொண்டிருந்த காதலின் மிகுதியை அவளுக்குக் கூறி, அதனற்கவள் இணங்குவாளாயின் அவளுக்கு வாய்க்கக் கூடிய நலங்களின் சிறப்பைப் பின்வருமாறு எடுத்துக் காட்டினள்:—

தாதொடு நறவு தூற்றுந் தருநிழ லினிது வைகி
மேதகு நிதியு மானும் வேட்டன வுவர்து நல்க
ஏதமில் அரம்பை மாதர் முறைமுறை யேவல் கேட்ப
நீதொழு மமரர் யாரு நிற்றொழப் பணித்தி யென்றாள்

"தமயந்தியே, மகரந்தப் பொடிகளோடு தேனையும் தூவுகின்ற கற்பக விருக்ஷத்தின் நிழலில் இனிமையாய் அமர்ந்து, சிறப்பு வாய்ந்த சங்கநிதி பதுமநிதி என்னும் இருநிதிகளும் நீ விரும்பியவைகளை மகிழ்ந்து கொடுக்க, பழிப்பற்ற தேவ கன்னிகைகள் வரிசை வரிசையாக நின்று நீ இட்ட கட்டளையைச் செய்ய, நீ இப்பொழுது இங்கிருந்து வருணனென்றும் வாயுவென்றும் தொழுகின்ற தேவர்களெல்லாம் அங்கு வந்து உன்னைத் தொழும்படி செய்து கொள்வாய்" என்பது இச்செய்யுளின் பொருள். இவ்வகைத்தாய இணையிலாப் பெரும் பேறுகளை எல்லாம் இந்திராணியாகித் தான் பெறுதற்கு மனங்கொள்ளாது தன்னுள்ளத்தே என்றும் நீங்காதிருந்த நளனிற்கே தன்னை உவகையோடும் அளித்தாள். அவனே, மாற்றியளித்த அன்பில் இவளுக்கு எள்ளளவும் குறைந்தவ னல்லனுயினும், பொய்ச் சூதாடி யாவதும் இழந்து தான் கெட்டதன்றியும் இவளையும் இந்நிலைக்குக் கொணர்ந்து பாம்பின் வாயிலும் தள்ளிவிட்டான் என்னும்படி செய்துளான். சூதினை அவன் ஆடிய காலத்தில் அருகிருந்தும் அவள் தடுக்காத கற்பின் திறத்தை முன்

குறித்திருக்கின்ரேம். ('இனிச் சூது ஒழிந்தோம்,' என்று நளன் தன்னை யறியாமலே அவளும் அச்சூதாட்டத்தில் கலந்திருந்தவள்போல் பாராட்டியதனையும் பார்த்தோம்) இங்குத் தமயந்தி தன்னைப் காப்பதற்குத் தெய்வத்தைத் துணையழைத்திலள். ஆடிய சூதினுல் நகர் நீக்கிக் காட்டிற்குக் கொணர்ந்து, நள்ளிரவில் சோர் துயிலில் நீத்தகன்ற நளனது கால்களின் நினைவியே பின்னுந் தொழுது இச்செய்யுளில் அவனைத் துணைக் கழைக்கின்ருள்.

வென்றிச் சினவரவின் வெவ்வா யிடைப்பட்டு
வன்றுயராற் போயாவி மாள்கின்றேன்—இன்றுன்
திருமுகநான் காண்கிலேன் றேர்வேந்தே யென்ருள்
பொருமுகவேற் கண்ணுள் புலர்ந்து. 120.

பதப்பிரிவு:—வென்றி சினம் அரவின் வெம் வாய் இடை பட்டு வல் துயரால் போய் ஆவி மாள்கின்றேன் இன்று உன் திரு முகம் நான் காண்கிலேன் தேர் வேந்தே என்ருள் பொரு முகம் வேல் கண்ணுள் புலர்ந்து.

பதவுரை.

பொரு - போர் செய்கின்ற
முகம் - முனையையுடைய
வேல் - வேலாயுதத்தைப் போன்ற
கண்ணுள் - கண்களையுடைய தமயந்தி,
புலர்ந்து - சோர்வடைந்து,
"தேர் - தேர்களையுடைய
வேந்தே - அரசனே,
வென்றி - வெற்றி பொருந்திய
சினம் - கோபம்கொண்ட
அரவின் - பாம்பினது
வெம் - கொடிய
வாய் - வாயின்
இடை - நடுவில்
பட்டு - அகப்பட்டு
வல் - மிகுந்த
துயரால் - துன்பத்தோடு
ஆவி - எனது உயிர்
போய் - போய்
மாள்கின்றேன் - சாகின்றேன்.
இன்று - இன்றையதினம்
உன் - உன்னுடைய
திரு - அழகிய
முகம் - முகத்தினை
நான் - நான்
காண்கிலேன் - காணப் பெற்றிலேன். (அது வொன்றே குறை)"
என்ருள் - என்று கூறினள்.

விரிவுரை:—துணைக்கழைத்த நாயகன் வாராமையால் இனித் தான் பிழைப்பதற்கில்லை என்பது தமயந்திக்கு நிச்சயமாயிற்று. அதற்குள் பாம்பும் மேன்மேல் விழுங்க, அதன் வாயில் தன்னுடல் நசுங்கும் வருத்தம் தாங்காமல் பின்னுஞ் சோர்வடைந்து, "ஆவிபோய் மாள்கின்றேன்" என முறையிட்டனள். உயிர் நீங்கும் தருணத்தில் மாந்தர் தத்தம் நெஞ்சத்திருந்த குறைகளைக் கூறுவது மரபு. தமயந்தியும் தன்குறை யாதெனக் கூறுகின்ருள். "மணம் புகுந்த நான்முதல் இப்பன்னிரண்டு வருடகாலமும் ஒவ்வொரு இரவும், துயில் நீத்துக் கண்ணைத் திறந்தவுடன் நான் உன் முகதரிசனம் செய்யத் தவற நேர்ந்ததில்லை. இவ்வொரு நாளே எனக்கு அப்பாக்கியம் கிடைக்காமற் போயிற்று. அதுவும், சாகின்ற இந்நாளில்தானு நான் உன் முகத்தை ஒரு முறையேனும் காணமற் சாதல் வேண்டும்!" என்று இரங்கி இறப்பதன்முன் தன் குறையைக் கூறிக்கொள்கின்ருள் தமயந்தி.

இனி, இறக்கின்ற தருணத்தில் இருந்த மனக்குறை அடுத்த ஜன்மத்தில் நிறைவடையும் என்பர். எனின், "இப்பிறவியில் நீ என்னைப் பிரிந்தாயானுலும் மறு பிறவியிலேனும்உன்னை என்கொழுநனுய் மீண்டும் பெறுதல் வேண்டும்" என்னும் ஓர் உட்கருத்தும் இதனில் அடங்கி யிருக்கின்றது.

மற்றொடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள் பிரிந்தேகுப்—கொற்றவனை
நீரேனுங் காண்குதிரோ வென்றழுதா ணீள்குழற்
காரே னுமொவ்வாள் கலுழ்ந்து. 121. [குக்

பதப்பிரிவு:—மல் தொடுத்த தோள் பிரிந்தும் மாயாத வல் வினையேன் பெற்று எடுத்த மக்காள் பிரிந்து ஏகும் கொற்றவனை நீர் எனும் காண்குதிரோ என்று அழுதாள் நீள் குழற்கு கார் எனும் ஒவ்வாள் கலுழ்ந்து.

பதவுரை.

நீள் - நீண்ட
குழற்கு - (தன்) கூந்தலுக்கு
கார் எனும் - கார்மேகங்கூட
ஒவ்வாள் - (நிறத்தில்) சமானமாகதவளாகிய தமயந்தி,
கலுழ்ந்து - கலங்கி,
"மல் - வலிமை
தொடுத்த - பொருந்திய
தோள் - (நளனது) தோள்களை
பிரிந்தும் - பிரியநேர்ந்தும்
மாயாத - (உடனே) இறவாத
வல் - கொடிய
வினையேன் - பாவியாகிய நான்
பெற்று - பெற்று
எடுத்த - வளர்த்த
மக்காள் - குழந்தைகளே,
பிரிந்து - (என்னைவிட்டுப்) பிரிந்து
ஏகும் - போகின்ற
கொற்றவனை - அரசனை
நீர் எனும் - நீங்களாவது
காண்குதிரோ - பார்ப்பீர்களோ (என்னவோ தெரியவில்லையே)"
என்று - என்று
அழுதாள் - அழுதாள்.

விரிவுரை:—"நானே உத்தமியாயிருந்தால் நாயகன் பிரிந்துவிட்டான் என்பது தெரிந்தவுடன் எனது உயிர் அந்தக்கணமே தானகப் போயிருக்க வேண்டாமா. அப்படிப் போகாததற்குக் காரணம் நான்செய்த தீவினையே ஆதல் வேண்டும். தானகப் போகாத வுயிரைத் தண்டிப்பதுபோல் இப்பொழுது பாம்பு விழுங்கிப் போக்குகின்றது. இவ்வளவு கொடியவளான என்வயிற்றில் பிறந்த பாவத்தால் மக்களே, நீங்களும்கூட ஒருநாளும் நளனை இனிக் காணமற் போய்விடுகின்றீர்களோ யாதோ, என்று அஞ்சுகின்றேன்" என்று தமயந்தி வருந்தினள் என்பது இச் செய்யுளின் கருத்து.

தான்தான் நளனைக்காணமல் மாண்டாலும், தன்மக்களேனும் பின்னுள் அவனைக் காண்பார்கள், என்னும்நினைவால் சிறிது மனந்தேற முயன்றபோது, "பாவியேன் வயிற்றில் பிறந்த அவர்களுக்குந்தான் அப்பாக்கியம் வருமோ!" என்ற பயத்தால் குலைந்து உருகுகின்ருள். எவ்வெவர் தீமையும் தன்னதேயாகப் பாராட்டும்பெருந்தகையுடையவள் இவள். நளன் நாடிழந்ததும் 'தன்னுடைய கால்புகுந்தது'; மக்கள் தம் தந்தையைக் காணாகில் 'தன்வயிற்றில் பிறந்தது'; தன்னுடைய துயரமெல்லாம் தன் வினையே.

வானசாஸ்திரம்.

(890-வது பக்கத் தொடர்ச்சி)

எரி நக்ஷத்திரங்கள்.

இராக்காலங்களில் நாம் வானத்தைச் சற்று நேரம் கவனித்துப் பார்த்தால் ஒரு எரி நக்ஷத்திரமாவது நமது கண்களுக்குத் தென்படுவது நிச்சயம். இவைகள் உண்மையில் நக்ஷத்திரங்கள் அல்ல. ஆனால் பார்வைக்கு ஆகாயத்தில் உள்ள நக்ஷத்திரங்களிற் சில நிலை பெயர்ந்து, ஓடுவனபோலத் தோன்றுகின்றன. இவை இராக்காலங்களில் மாத்திரமன்றிப் பகற்காலங்களிலும் ஆகாயத்தில் இவ்விதம் பறந்துகொண்டே யிருக்கின்றன. சூரிய வெளிச்சத்தினால் நமதுகண்களுக்குத் தோற்றுவதில்லை. இராக்காலங்களிலும் நமது வெறுங் கண்களுக்குத் தெரிவன சிலவே. தூரதிருஷ்டியின் உதவியாற் பார்த்தால் எண்ணிறந்தன நமக்குத் தோற்றுகின்றன.

இவைகள் அந்தரவெளியில் சுழன்று திரிகின்ற சிறு உருவங்கள். பூமியின் வாயுப்படலத்தில் அகப்பட்டு அவைகளின் வேகத்தினால் வாயுவுடன் தேய்வதால் சூடு கிளம்பி எரிந்து தூளாய்ப் போகின்றன. இவைகளின் அளவு பெரும்பான்மையும் சிறு கற்களின் அளவுதான் இருக்கும். ஆனாற் சில பெரிய பாறையளவுள்ளவைகளாயுமிருக்கின்றன. பூமிக்கு எல்லாத் திசைகளிலுமிருந்து இவை வருகின்றன. சில சமயங்களில் பூமிக்கு எதிராகவும், சில சமயங்களில் பூமிக்குப் பின்புறமாகவுமிருந்து வருவதால் இவைகளின் வேகம் கூடியும் குறைந்துமிருக்கின்றன. சில, நிமிஷத்துக்கு 2700 மைல் வீதம் ஓடுகின்றனவென்று கணக்கிட்டிருக்கிறார்கள். பூமியைச் சுற்றி வாயுப்படலம் இல்லாதிருக்குமாயின் இவைகள் ஒரு மாறுதலில்லாமல் அதிவேகத்தோடு பூமியிலே வந்து தங்கும். அவ்விதமாய்ப் பூமிக்கே இவைகள் வருவதாயிருந்தால் உலகிலுள்ளவர்கள் பாடு என்னவாகுமோ? மிகச்சிறிய உருவங்களாயிருப்பதனால் எரிந்து ஒளி தோற்றுவதற்குமுன் இவைகளைப் பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ள முடியாது. இவைகள் எரிந்து அற்றுப் போனாலும் இதனின்று எழும்பும் தூளிகள் பூமியில் படிந்துகொண்டே யிருக்கின்றன. இவ்விதம் படிவதினால் காலகதியில் பூமியின் அளவு சற்றுப் பருத்து வரலாம். சில முற்றாய் எரிந்து மறைந்து போகாமல் தரைக்கு வந்து சேர்கின்றன. இவ்விதமாக ஆகாய வெளியிலிருந்து பூமியில் வந்து சேர்ந்த கற்பாறைகள் அநேகம் கண்டெடுக்கப்பட் டிருக்கின்றன. இவைகளைப் பற்றி பின்னாற் சொல்லுவோம்.

அந்தர வெளியில் சுழன்று திரியும் இச்சிறு உருவங்கள் எண்ணிறந்தன. பூமிக்கு ஒவ்வொரு வருஷத்திலும் எட்டுவனவே கணக்கற்றனவென்றால் மற்றதைச்சொல்ல முடியுமா? நமது வெறுங் கண்களுக்கு எரி நக்ஷத்திரமாய்த் தோற்றுவன ஒவ்வொரு வருஷத்திலும் 146,000,000-க்குக் குறையாதென்று ஒரு வானசாஸ்திரி கணக்கிட்டிருக்கிறார். இதைப் பார்க்கிலும் பத்து மடங்கு அதிகமானவை தூரதிருஷ்டி மூலமாய்ப் பார்க்கும்போது நெருப்புப் பொறிகள் போல் தோற்றி மறைகின்றன.

சற்றேறக் குறைய நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் இவைகளைப் பற்றிய சரியான அறிவை வான சாஸ்திரிகள் கண்டு கொள்ளவில்லை. இக்காலத்துக்கு முன் இவ்வொளிகள் பூமியின் வாயுப் படலத்தில் உண்டாகும் ஏதோ மாற்றம் என்றிருந்தார்கள். பின்னால் இவைகளைப் பற்றிப் பரிசோதனை பண்ணினதில் ஒவ்வொரு வருஷமும் சில மாதங்களில் இவைகள் அதிகமாகத் தோன்றுவதினாலும் அவ்விதம் தோன்றும்போது இவைகள் ஆகாயத்தில் ஒரு குறித்த விடத்திலிருந்து கிளம்புவதாயும் தெரிந்தது இக்காரணங்களையும் இவைகளோடு சம்பந்தப்பட்ட வேறு காரணங்களையுங்கொண்டு இவைகள் தேனீக் கூட்டங்களைப்போல், சூரியனைச் சுற்றி அவைகளுக்கு அமைந்த பாதைகளில் அதிவேகமாய்ச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கின்ற மிகச் சிறு உருவங்களின் கூட்டம் என்பதும், பூமி சூரியனைச் சுற்றி வருகையில் இக்கூட்டங்களுக்கு இடையே செல்வதினால் இவைகளில் அநேகம் பூமியின் வாயுப்படலத்தில் அகப்பட்டு எரிந்து போகின்றனவென்பதும் கொள்கை. இவ்விதமான கூட்டங்கள் எண்ணிறந்தன சூரியனைச் சுற்றி வருகின்றன. இவைகள் கூட்டமாக அவைகளின் பாதைகளில் ஒருபாகத்தில் மாத்திரமல்லாமல் எல்லாப் பாகங்களிலும் நிறைந்திருக்கின்றன. ஆனால் சில கூட்டங்களில் ஒருபாகத்தில் இவை மிகநெருங்கி யிருக்கின்றன. பூமி இந்தநெருங்கிய பாகத்துக் கிடையே செல்லுகையில் நமக்குத் தோன்றும் எரி நக்ஷத்திரங்கள் அளவிறந்தன.

பூமி ஒரு வருஷத்தில் இவ்விதமான அநேக கூட்டங்களுக் கூடாகச் செல்கின்றது. இவ்விதம் செல்லும் தேதிகள் இன்னவென்பதைப் பற்றி வானசாஸ்திரிகள் வரையறுத் திருக்கிறார்கள். இவைகளில் முக்கியமான கூட்டம் ஒன்று நவம்பர் மாதத்தில் பூமிக்கு எதிர்ப்படுகின்றது. இது ஒவ்வொரு வருஷமும் தோன்றினாலும் 33 வருஷத்துக் கொருமுறை இந்தக் கூட்டத்தின் அடர்ந்தபாகம் பூமியின் பாதையில்வருகிறது. அப்போது விழும் எரிநக்ஷத்திரங்கள் வாண வேடிக்கை நடப்பதற்கு ஒப்பா யிருக்குமென்று சொல்லுகிறார்கள். ஆனால் 1899-ம் வருஷவம் இது நடக்குமென்று எதிர்பார்த்திருந்தவர்கள் அந்த வருஷத்தில் எண்ணியிருந்த விதம் நடக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் மற்றக் கிரகங்களுள் ஒன்றின் கவர்ச்சியால் இக் கூட்டத்தின் பாதை சற்று விலகியிருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

இதைத் தவிர நவம்பர் மாதங்களில் இன்னுமொரு கூட்டம் பூமியின் பாதைக்குள் வருகின்றது. இது இருபத்து மூன்றும் இருபத்தேழாம் தேதிகளுக் கிடையில் பூமியைச் சந்திக்கின்றது. இக்கூட்டத்தின் பாதையை அளவெடுக்கையில் இதன் பாதையும் ஒரு தூமகேதுவின் பாதையும் ஒன்றாயிருப்பதைக் கவனித்தார்கள். இதிலிருந்து அந்தத் தூமகேதுவுக்கும் இக்கூட்டத்துக்கு மிடையில் ஏதாவது தொடர்ச்சி யிருக்கக் கூடுமோவென்ற சந்தேகம் ஏற்பட்டது. இதை ஆதாரமாகக் கொண்டு மற்றக் கூட்டங்களைப் பரிசோதனை செய்ததில் இவ் வெரிநக்ஷத்திரக் கூட்டங்களுக்கும் தூமகேதுக்களுக்குமிடையில் தொடர்ச்சி யிருக்கிறதென்பது இப்போது எல்லா வானசாஸ்திரிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கின்றது. இத்தூமகேதுக்கள் சிதைவு படுவதிலிருந்து இவ்வெரி நக்ஷத்திரக் கூட்டங்கள் உண்டாகின்றன வென்பதும் ஒரு கொள்கை.

மேற்சொன்ன இரண்டு கூட்டங்களைத் தவிர ஏப்பிரல் மாதத்திலும் ஆகஸ்ட் மாதத்திலும் வேறு முக்கியமான கூட்டங்களும் பூமியைச் சந்திக்கின்றன.

எரி நக்ஷத்திரங்கள் மிகப் பெரியவைகளா யுள்ளவைகள் முற்றும் எரிந்து போகாமல் பூமியில் பாறைகளைப் போல் வந்து விழுகின்றன. இவைகளின் வேகம் வாயுப் படலத்துக்குள் அகப்பட்டதின்பின் அதிகம் குறைந்து விடுவதனால்இவை பூமியைத்துளைத்துச்செல்லாமல்பெரும்பான்மை மேலேயேவிழுந்துகிடக்கின்றன. சில சற்றுத் தூரம் பூமிக்குள்ளே புதைபட்டுக் கிடக்கின்றனவென்றாலும் பத்தடி தூரத்துக்குக் கீழே செல்வதில்லை. இவைகளில் மிகப் பெரியது, மெக்சிக்கோவில் பாச்சுபிறிற்றோ வென்னு மிடத்தில் கண்டெடுக்கப்பட் டிருக்கிறது. இதன் நிறை ஐம்பது டன், அதாவது ஏறக்குறைய 8000 மணங்கு இவ்விதம் பூமிக்கப்பாலுள்ளன வெளியிலிருந்து வந்தது சேர்ந்த இவைகளைச் சோதனை பண்ணிப் பார்த்ததில் இவைகள் மூன்றுவித வகுப்புக்களைச் சேர்ந்தவை என்பது தெரிகிறது. முதல் வகுப்புக்குச் சேர்ந்தவைகள் முழுவதும் இரும்பும் நிக்கலுமா யிருக்கின்றன. இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவை பாறைக்கற்களும் இரும்புமாயிருக்கின்றன. மூன்றாம்வகுப்பிலுள்ளவைகள் முற்றும் கல்லா யிருக்கின்றன. இவைகளில் பூமியிலுள்ள தாதுப்பொருள்களில் அநேகம் இருக்கின்றன. பூமியிலில்லாத வஸ்து வொன்றும் தென்படவில்லை. ஆகவே பூமியிலிருக்கிற தாதுப் பொருள்கள்தான் மற்ற அண்டங்களிலு மிருக்கவேண்டு மென்பதற்கு இதுவும் ஒரு சான்றாகின்றது.

காந்திமதி என்னும் காந்தாரநாட்டுக் கட்டழகி.

18909

(896-வது பக்கத் தொடர்ச்சி)

35. படகின் செலவு.

சிறிது தூரஞ்சென்றது படகு. அங்கு ஓர்புறம், "கொம்பிருந்த மென்பிகங்கள் கூவுதோறுந் தானுங்கூவி ஒருத்தி நங்கை மடியகத்தில் வம்பவிழ்ந்த நன்மலர்கள் கொய்துகொய்து பெய்திருக்க, வளர்ந்தகாதல் நம்பியெய்திப் பின்னொளிந்து மெல்லமெல்லக் கள்ளமாட, நன்றுநன்று செய்தியென்று தும்பிபம்பித் தூற்றுகின்ற காட்சிதன்னைக் காண்க" வென்று சித்திராங்கன் காட்டியிட்டான். இதனிற்குள்பூக்களைப்பறிகொடுக்குமவ்வணங்கனாளும் கொழுநன்றன் செய்கையுணர்ந்து, "வள்ளலே யாருக் கென்றிம் மலர்தனைப் பரிவினோடு கள்ளமும் செய்தாய்? மற்றோர் கன்னியை வேட்கும் நின்றன் உள்ளமோ கொடிது கண்டேன். உறவினி யுகுத்து விட்டேன். எள்ளினென் அகலப் போவாய்," என்றனள் ஊடல் கொண்டாள். விளையாடும் எண்ணத்தால் புரிந்த தன்செயல் வினையாய்முடிந்ததற்குப் பெரிதும் வருந்தியவத் தோன்றல் தனதுயி ரனையாளை இரந்தொன்றிற்கும் அவள் மனம் இளகினாளல்லள். வெற்றிக் கொடியெனத் தன் புருவங்களை நெற்றிமுற்ற ஏற்றினள். காதலன் உரத்தைக் கல்விப் பூசிய உதிரம் என்னப் போதினைப் பழித்தாள் முகத்துக் கண்ணயில் சிவந்து போன. ஊதையின் உயிர்ப்பு வீங்கி மொழிசில குளறிச் சோரப் 'போதுவாய் விரைவின் நின்றன் புதுமகள் பாலே' யென்றாள். காதலன் என்ன வந்த காலையும் முகங்கவிழ்ந்து ஏதில னாகி யேகி யிருந்தனன் சிறிது நேரம், மாதவள் தானும் பின்னர் மாறிய துனியள் மற்று ஏது நான் செய்வென் இவனை யெய்துதற் கென்று நைந்தாள். எனினும் புலவியில் தான் தோற்றமை புலப்படாவகை சூழ்ந்து, "என் செய்வேன், தமியள், யாருமில்லேன்" என்னப் போய் நிலமகளுடன் தன் துயர் கூறிப் புலம்புவாள்போல், தருவொன்றின் நிழலிற் சாய்ந்து விரிகுழல் மண்ணிற் புரள வளர்ந்தனள். அயலே அமர்ந்து மலர்களைத் தொடையலாய்ப் பிணைத்த வண்ணம் செவ்வி நோக்கிக் காத்திருந்த அன்பனும் அவ்வயின் நண்ணி, மயிலினை அணைத்தெடுக்கும் களபம் போல் அவளைப் பரிவுடன் தழுவி யெடுத்து, "மருந்தினும் அரிய நல்லாய், மனமுறப் பயிலுந் தோறும் விருந்தென மேன்மேல் இன்பம் நல்குவாள் நீயே யல்லால் இருந்தனள் யாரே யெற்குப் புதுமகள் ஒருத்தி" யென்று தெரியலைச் சூட்டிப் புல்லிச் சிறுநகைவேண்டி நின்றான். அவளோ, எதிருறப் புல்லுதற் கெழுந்த சிந்தையளாயினும், "நச்சிய நங்கை நீயுன் மனதினால் அணிந்த விக்தப் பச்சிலை பூவும் சேர்ந்த படலையை மற்றொருத்தி யெச்சிலென் றுணர்வேன் ஐய, விரும்பியே அதனைச் சூடப் பிச்சியோ யானே" என்று பிய்த்தனள் எறிந்துவிட்டாள். பின்னிவள் தன்னரும் நாயகனுக்கு எதிர் முகமாய் நோக்கி நிற்கலாயினள். படகினின்று இவையனைத்தையுங் கண்டிருந்த கோமகன், "மங்கைமீர் நும்மைச் சேர்ந்து வழிபடும் அரிய செய்கை எங்களால் ஆவதன்று; ஏழையேம் எளிதில் நும்பால் தங்கிவர் தனுகற்கில்லை தணந்தகன் றேகற்கில்லை, அங்கியே போல்வீர் மற்றோர் அரசனும் போல்வீ ரம்மா" வென்று ஆடவர் எளிமை சாற்றக் கஜேந்திரவிமன் அருந்தவப் புதல்வி, "காணிய வருவே னென்று கழிந்தகன் றேகும் வண்ணம் வீணுரை வரைதற் கொவ்வும் விழுப்பமோ எங்கட்கில்லை" என்று முன் வைத்தியன் தாமோதரன் புணர்ப்பிற் கிணங்கி இளவரசன் விடுத்த நிருபத்தைக் குறித்து இயம்புமளவில் மாலினி, "நாணமும் துறந்து பின்னர்ப் பிரிந்தவர்க் காண நண்ணிப் பேணுவோம் உயிருஞ் சற்றுப் பெண்கள்யாம் காண்டி" என்றாள். இருவரும் ஒருங்கு சேர்ந்து இவ்வாறு இங்கு இளவரசன் மனமுருக எதிருரை வழங்கும் நேரம் அங்கு அவ்வணிதை வெறுத்து நீத்த மாலையைக் கடுவனொன்று தாவி எடுத்து அணிந்துகொண்டு அயலொரு மரக்கிளையிற்சென் றமர்ந்தது "நல்லாய், இக்குரங்கின் காரியத்தைக் காண்" என்று அவன் அவள் ஊடலைத் தீர்ப்பதற்கு இதனை ஓர் நிபமாகக்கொண்டு அவள் முகத்தைத் திருப்பிக் காட்டுவதும், அவள் தீராச் சினத்தவள் போல் மறித்துக்கொள்வது மாயிருக்க, அதற்குள் மரக்கிளை வந்தடைந்த மந்தி, "எனது அற்றம் பார்த்து உனக்கு இம்மாலை யிட்டகன்ற குரக்குமகள் யாரே" என்று வெகுண்டதையொத்து அம்முசுவின் கழித்திருந்த மாலையை அறுத்தெறிந்தது. இதனைக் காணப் பொய்த்துனியும் மறைந்துபோய் அவளுக்கு நகை வரவே நாயகன், "வாழிவாழி கவிகுலத்தின் தலைவி, யுன்னால் வரம்பெற்றேன்" என்று குரங்கினை வாழ்த்தித் தனதினியாளைத் தழுவிக்கொண்டு அவளழகைப் பாராட்டுபவனாய், "நகையல், நகையல், நங்காய்நின் முறுவல் தன்னை வெண்மௌவல் முகையோ முகையோ என்றெண்ணி மொய்க்குங் கண்டாய் வண்டினங்கள்," என்னுங்கால் அவள், தன்னைப்புல்லிய கரங்களை மெல்லென மெல்லென நாணத்தால் தள்ளுதலும் அவன், "பகையில் தகையல் பாவாய்நீ சிரித்த பின்னர்ச் சீறுவது மிகையே மிகையே அறியேனோ! வில்வாய் கள்ளி விழைந்தொருசொல்!" என்று வேண்டினான். அதற்

கவன், "அகழ்வாரைத் தாங்கும் அவனிபான், எளளி இகழ்ந்தாலும் வற்போமே நாங்கள். புகழ்ந்தென்னைச் சொல்வலைப் பாய்ச்சவேண்டா. தூய்ப்பார்தாம் இன்பமன்றோ வல்லூரங் கண்டெடுத்தால் மற்று" என்று தனது உவகையை வெளிப்படுத்தி மகிழ்வினோடு நீர்க்கரை எய்தினள். இங்கு இவர்கள் பேசிக்கொண்ட சொற்கள் படகிலிருந்தோர் செவிகளுக்கு எட்டவில்லையாயினும் நிகழ்ந்தனவற்றின் உறுபொருளை உணர்ந்தனராதலால் "குரங்காலும் நன்மை யுளது குறித்துத் தெரிந்துகொள்" என்றான் அரசன். சிரித்ததற்கு, "அநுமன் மரபிற் கிதுவோ ரதிசய மாமோ நனிமகவிந் நாயே நலத்து," என்று மந்தாகினி பைரவனை அன்போடும் வருடித் தந்தாள்.

படகு பின்னும் சிறிது தூரம் செல்வதன்முன், மணலில் வைகிய மாதராள் ஒருத்தி கண்களை மூடிக்கொண்டு தன் விரலால் தரையில் ஏதோ வரைவதும் பின் கண்திறந்து பார்த்துத் தெருமரல் எய்துவதுமாய் இருக்கக்கண்ட இளவரசன், "யாதுபுரிகின்றாள் அவள்" என வினவினான். மந்தாகினி, "அன்ப, அறியாய் கொல், கூடலிழைத்துப் பிரிந்தகன்றவன் வருகின்ற குறிபார்க்கும் எங்கள் தொழில்? கோடு கூடிற்றில்லை போலும், இப்பேதை வருந்துகின்றாள்," என்று செப்பினாள். "பாவியேன் செய்த பழியால், பாவம், நின் விரல்நுனி காய்த்ததோ" என்று இளவரசன் அவள் கரங்களைப் பரிவினோடும் பற்றி நோக்க, மாலினி "அரசே, ஈண்டு நோக்குதி, இம்மயில் செயும் தந்திரத்தை" என்று அழைத்துக் காட்டினாள். யாவரும் அவ்வழி நோக்கக் கூடலிழைத்திழைத் தழித்துக்கொண்டிருந்த அவ்வனிதையின் அருகு நின்ற மயூரமொன்று, கோடி கூடாக்கால் அவள் உறும் துயரத்திற்கு ஆற்றாதாகிக் கடைமுறையாய் இதுவே தான் பார்க்குங் குறி என்று வரைந்தவள் கண்களைத் திறக்குமுன், தன் அலகினால் கோட்டினைக் கூட்டிவிடக் கண்டனர். மஞ்ஞையின் செய்கையிது என்று அறியாத அம்மாது காதலனைக் கடிதின் கூடலாகும் என்னும் மகிழ்வினால் புளகம் பூத்தனள்.

இன்னபடி, காட்சிகள் எண்ணிறந்தன எகுநெறி எங்கும் அப்படகு கண்டு சென்றது. கரைமரக் கிளையினில் தன்னரும் கிள்ளையின் கூட்டை நாலவிட்டு நீர்திளைக்கச் சென்ற நங்கை காலந் தாழ்த்தலும், பசியால் வாடிய வச்சுகம் கூவக்கேட்டுக் குரங்கின் குட்டியும் அணிற்பிள்ளையும் தீங்கனிகள் கொணர்ந்தாய்ந்து அக்கூட்டின் இருபுறத்துமிருந்து உள்ளிருக்கும் பறவைக்கு ஊட்டக் கண்டனர் ஒருசிறை. மதனனும் இரதியும் அன்ன இருவர் தனியிடமுற்றுத் தழுவினர் நெருங்கித் தண்புனல் மூழ்குவார், தம்நிழல் அதனில் தோன்ற வதிலர் கண்டாரென்று நாணினர் நீத்தகன்றார் ஒருபால். முழுகினள் ஒருத்தி நீரில், முடுகியோர் வாளை அவடன் கழுத்தினைக் கதுவிச்சூழத் தன்னுடன் குளிக்கப்போந்த கொழுநன்தான் காதகினாலே குலவினன் என்ன எண்ணி எழுதலும் மீனைக் கண்டாள் வெருவினள் இரியல் போனாள். இதனைக்கண்டு இளவரசன் முதலாயினோர் எய்திய நகைப்பு ஓய்வதன்முன், வேறோரிடத்தில் நீரளைந்து நின்றவொரு அரிவையை, அனங்கனே போல்வான் அன்னாள் அரும்பெறல் நண்பன் துன்னிக் கனங்குழை கழுகப் பார்க்குய கட்கடைத் தீயைக்கண்டு, புனல்தனில் படிந்தார் கண்கள் போமெனச் சிவப்ப தோரான் சினந்தனள் தன்பால் என்று தெருமரல் உற்று நிற்கக் கண்டனர். மந்தாகினி இதனைக் குறித்துப் "பாவம், இவ்விளமகன் வெளுத்ததெல்லாம் பாலென்று எண்ணும் பேதையன் போலும். சிவந்ததெல்லாம் சினமென்றும் அஞ்சுகின்றான்!" என்னலும் சித்ராங்கன், "அவனென் செய்வான். அவ்வணங்கு அவனை அத்துணை அச்சத்தில் வைத்திருக்கின்றாள் போலும்!" எனப்பகர்ந்தனன். பின்னுஞ் சிறிதுதூரம் படகு செல்ல அங்குத் தன் அன்பனோடு நீருள் குடைந்திருப்பாள் ஒரு மடவாள் தடத்தருகு தழைத்து வளர்ந்த ஒரு தருவின் கிளையிருந்த பூவை விரும்பி "இக்கிளையை எனக்கு வளைத்துத் தருதி" என நாயகனை வேண்டினள். அவனும் அன்னவாறு செய்ய அவள் அக்கிளையைப் பற்றினள். பற்றலும் அதனை நிறுத்ததற்கேற்ற வன்மையில்லா இம்மெல்லியலோடும் அக்கிளை அந்தரத்தே நிமிர்ந்துவிட்டது. மெய்நின்று புனல் பெருக நான்ற அவள் மண்மிசை இழியப்போந்த விண்ணதிக் கங்கையை ஒத்தாள். வந்திய நோக்கினோடு கீழ் நின்றகாளையும் நதியினைத் தாங்க வந்த சிவபிரான் என்னல் ஆனான்.

இன்னும் படகு மேன்மேல் செல்ல பூக்கொய்தும் நீராடியும் முடிந்த சிலர் ஆற்றங்கரையினிலமர்ந்து சிற்றுண உண்பதும் தாம்பூலம் தரிப்பதும் பாணிகள் பாடுவதும் ஆகி இனிதின் தம் பொழுதினைப்போக்கக் கண்டனர். "ஐய, மருந்திவை, பின்னுஞ்சிறிது உண்" என நாயகி நல்கநல்க அருந்துவான் மனம், இப்பண்டத்தின் சுவை, ஆக்கியதிறத்தால் அமைந்ததோ மற்று அளிப்பவள் அன்புதானோ எனக்களித்தது. தம்பலம் மடித்துத் தந்தாள் மலர்க்கரம் நொய்தின் பற்றிக் "கொம்பனாய், குழையோ பச்சை, பாகுதான் கரிது, சுதையின் பிம்பமோ வெள்ளை, பின்னை, செந்நிறம் விளைக்கும் இத்தந்திரம் கண்டேன் உன்றன் கையொளி கலந்து விட்டாய்" என்று அவன்மகிழ்நன் செந்தாமரையன்ன அவள் அகங்கையைப் பாராட்டி அதனிற்கோர் முத்தமீந்தான். அந்நங்கையோ, "என்னிது' அன்ப! ஆயின், இவ்விரு கரத்தின் வண்ணம் உன்னுடை நயனம் உற்ற காதல் போல் சேர்க்கை தானோ! பன்னினை பழித்த சொற்கள், அடக்குமாறுன்றன் வாயைத் துன்னியே தூர்ப்பேன்" என்று முத்தங்கள் பொழிந்திட்டாளே.

இன்னவாறு பிறர் இன்புறக்கண்டு தாமும் இன்புற்றுப் படர்கின்ற சித்ராங்கன்முதலாயினோர் வகுநெறியில் மாதர் சிலர் பந்துகள் ஆடிக்கொண்டிருந்தனர். இளவரசன் அவ்வழகினைத் "தந்தப் பந்தினைத் தருநிழல் பயிலுவார்; அவைதாம், உந்தும் பாவையர் செங்கரத்தொளிபட உதிக்கும் இந்து போலவே சிவப்புற எழுந்து பின் பொழிலில் சந்திரன்பல சஞ்சரித்தாலென நிலவி, இறங்கும் போதினில் எதிர்தா இமைப்பிலர் நோக்கிப் பிறங்கு பேதையர் கண்ணிழல் கதுவவும், வண்டின் கறங்கு கூட்டங்கள் தொடரவுஞ் செய்தலால் கடலுள் உறங்கப் போகுமோர் உவாமதி சாய்வதை ஒக்கும்" என்று தன் காதல் வனிதையர்க்குப் புனைந்து கூறினான்.

இன்னுஞ் சிறிது தூரஞ்செல்ல, அங்குச் சிலர் கூடி இசையெனும் நறவமாந்திக் களிப்பினால் மெய்ம்மறந்து அனுபவித்திருந்த செவ்வியைநோக்கினர்.

சிமிறுகள் அணவி யாங்கு நிரைநரம் பமைந்த யாழின் இமிழொலி யிழைய வேங்க, மணற்றடம் மண்டி மண்டிக் குமிழிசெய் குடிலைப் பங்கம் தண்ணுமை தாந்தாமென்னத் தமிழினிற் குழைந்த பாடல் தந்தனர் பதுமை நல்லார். பாடுவார் இவ்வகைத் தையலார் பரிந்ததை நாடுவார் ஆடவர் நலம்பெறத் துய்த்தலும் மூடினார் கண்ணினை முயன்றுதம் பொறியெலாம் கூடுமா காதிலே குறித்தனர் என்னவே. கூவியிருந்த குயிலுங் குரலோய்ந்து கேட்டது. பிரிந்துறைந்த அன்றிலுந் தன்துணையைச் சிறிது மறந்தது. "நீரினுள் துளாவசென்ற இக் கருமேதி தன் முலையைப் பருவரால் ஊட்டுவதும் உணராமல் அவ்விசைதரு மின்பத்தில் ஈடுபட்டிருக்கின்றது" என்று இளவரசன் தன்னோடு உறைந்தவர்க்குக் காட்டினான்.

இசையின் நலமிது. அதனைப் பாடுவோர் கேட்போர் திறமும் தன்மையும் இது. அவர்களைச் சூழ்ந்திருந்த பொழிலின் அழகும் பொதுவற விளங்கியது. அங்குற்றோர் செயல்களோ காணற்கருமையன. பாய்ந்தோடித் தன் தந்தையை எய்த வேண்டிய இளவரசன், இவைகளுக்கிடையே தவழ்ந்து சென்றானென்று எவரும் சிளந்து சொல்லார். மெள்ள மெள்ளப் படர்ந்தது படகு. இதனில் உள்ளவவர் சென்று குன்றப்போர் நிகழுமிடஞ் சேருமுன் மற்றுஞ் சிலர் அங்கு அடைய வேண்டியவர்களா யிருக்கின்றனர். அவர்கள்பால் செல்வோம் இனி.

T. N. சேஷாசலம்.

அகப்பொருள்வரலாறு

(874-வது பக்கத் தொடர்ச்சி)

2 - வது : கற்பியல்

ஓதற்பிரிவு.

[புலனெறி வழக்காகப் புலவர்களாற் புனைந்துரைக்கப்படும் அகப்பொருள்நூல்களிற் 'களவியல்' பெரும்பாலும் தலைவன் தலைவியுடன் கூடுங் கூட்டத்தையும், 'கற்பியல்' முற்றும் அக்கூட்டத்தினிடையே பல காரணம்பற்றித் தலைமகன் தலைவியை விட்டுப் பிரியும் பிரிவையும் பற்றிப் பேசும்.

அகப்பொருளின் இலக்கணங்களை அழகுபெற அமைத்து முறைபட மொழிந்த முன்னோர் இந்நிலத்தை, அதனியற்கை அமைப்புக்கும், அக்காலத்து ஆங்காங்கு வாழ்ந்த மனிதர்களின் தொழின்முறைக்கும் வாழ்க்கை முறைக்கும் ஏற்றவாறு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணையாகப் பாகுபாடு செய்தார். அப்பாகுபாட்டுக்கிணங்க அக்காலத்தவர் காதலனுங்காதலியுமாகிக் கலந்து வாழ்ந்த காமவொழுக்கப் பகுதியையும்,

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல், அவற்றின் நிமித்தம்

என்று ஐவகைப்படுத்தி, கூட்டம் குறிஞ்சிக்குரியதென்றும், பிரிவு (உடன்போக்குட்பட) பாலைக்குரியதென்றும், (தலைவன் பிரிந்த காலத்துத் தலைவி) ஆற்றியிருத்தல் முல்லைக்குரியதென்றும், ஆற்றாதிரங்கல் நெய்தற்குரியதென்றும், நெடிது பிரிந்து திரும்பி வந்த தலைமகனோடு தலைவி முந்திப் பிணங்கி ஊடுதலும் பிந்தி ஊட லுணர்ந்து கூடுதலும் மருதத்திற்குரியவென்றும் அவர்கள் ஆட்சியின் அமைத்தார். இம்முறைப்படிக் குறிஞ்சித் திணைக்குரிய கூட்டம் களவியலின் கண்ணும், முல்லை நெய்தல் மருதங்களுக்குரிய இருத்தல் இரங்கல் ஊடல்கள் கற்பியலின் கண்ணும் அடங்கி நிற்ப, ஏனைப் பாலைக்குரிய பிரிவு இவ்விரண்டினோடுஞ் சம்பந்தப்பட்டு ஒருபாற்படாது இடைநிற்கும். ஆதலான் இவ்விருத்தலிரங்கலூடல்களுக்கு முதற் காரணமாகிய பிரிவையே கற்பியலின் பிரதான விஷயமாகக்கொண்டு, அதனைப் பண்டை ஆசிரியர் ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணிவினைப்பிரிவு, வேந்தற்குற்றுழிப்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, பரத்தையிற்பிரிவு என்று ஆறுகட்பகுத்துக் கூறினர்.

ஓதல், காவல், பகைதணி வினையே,
வேந்தற் குற்றுழி, பொருட்பிணி, பரத்தையென்
றாங்கவ் வாறே கற்பினிற் பிரிவே

என்றார் இறையனார் அகப்பொருளில்.

இவற்றுள் ஓதற்பிரிவு என்பது தலைமகன் தனது கல்வி முற்றாமையை நன்குணர்ந்து பிறநாட்டுக் கலைவல்லாருழைச் சென்று தான் முற்றக்கற்றுக் கைபோகாதவற்றை அவர்வாய்க் கேட்டுணர்தற் பொருட்டும், கல்வியால் தன்னிலுந் தாழ்ந்தாரையுற்று அவர்க்குத் தான் கடைபோகக் கற்றறிந்தவற்றை உணர்த்தி அவர்களை அறிவித்தற் பொருட்டும், தனது கல்வித்திறத்தைப் பிறர்க்குக் காட்டிப் பெரும்புகழ் பெறுதற் பொருட்டும் பிரிந்து செல்லும் பிரிவாம்.

காவல், தூது, போர், பொருள், பரத்தைமை இவற்றைக்குறித்துப் பிரியும் பிரிவினும் கல்விகுறித்துப் பிரிதல் மிக்க சிறப்புடைத்தாதலானும், இது பெரும்பான்மை பார்ப்பார்க்கு உரித்தாதலானும், ஏனைப்பிரிவுகளின் கால வரையறை ஓராண்டினளவதாக இதற்கு வகுத்த காலவெல்லை மூன்று யாண்டாதலானும் இது முதற்கண் வைக்கப்பட்டது முன்னூல்களில். ஆனால் பின்னூலாகிய அகப்பொருள்விளக்க நூலுடையாரும், அவர்வழியைப் பின்பற்றிய இலக்கணவிளக்க நூலாசிரியரும், பரத்தைமையின் தகவின்மையையும் இழிவையும் நோக்காது, மருதத்திணைக்குரிய ஊடல் நிகழ்வதற்கு நிலைக்களமாய் அது புலவர் புனைந்துரைப்பதற்கு விரிவாக இடந்தந்து நிற்கும் பயன் கருதியும், சிலர்க்கே உரித்தாகிய மற்றைப் பிரிவுகளைப் போலாது அது எல்லோர்க்கும் பொதுவாகும் பெற்றி குறித்தும் அதனையே முதலாக வைத்தார்.

பரத்தையிற் பிரிதல் ஓதற்குப் படர்தல்
அருட்டரு காவலொடு தூதிற் ககறல்
உதவிக் கேகல் நிதியிற் கிகத்தலென்
றுரைபெறு கற்பிற் பிரிவறு வகைத்தே

என்று வரன்முறை செய்தார் நாற்கவிராசநம்பியார். இவ்விலக்கணத்தைத் தழுவியெழுந்த அம்பிகாபதிக் கோவை, தஞ்சைவாணன்கோவை முதலிய கோவைகளைப் பாடிய புலவரெல்லாம் இம்முறையையே கைப்பற்றினாராயினும், முன்னோர் வகுத்த முறையே நேரிதாதலின் அதையே நாமிங்குப் பின்பற்றினோம்.]

தன் காதல்மனையாளுடன் இல்லறம் இனிதாற்றி இன்பந்துய்த்துநின்ற தலைமகன், தாம் செய்து முடிக்க வேண்டிய காரியங்களைச்செய்துமுடிக்கமுயலாது காமத்தே காலாழ்ந்து தாழ்தல் அறிவுடையோர்க்கு அழகன்றென ஓர்ந்து. முதன்முதல் கலைநிரம்பாத தன் மதியைக் கல்வி கேள்விகளால் வளர்த்து முற்றுவிக்கக் கருதி, பிறநாடுகளுக்குச் சென்று ஆங்காங்குள்ள கல்வியான் மிக்காரைக்கிட்டி, அவரோடு அளவளாவி உசாவிப் போறினுறுய் மீளத் தீர்மானித்தான். அவ்வாறு பிரியத் துணிந்த தலைமகன் தன்கருத்தை மெல்லத் தன்காதலிக்குணர்த்தி, அவளுடைய சம்மதத்தையும் பெற்று அவளறியச் செல்வதே நேரென நினைந்தானாயினும் அவ

ளுக்கதை வெளிப்படையாகக் கூறத் துணியாது குறிப்பாக அறிவிக்கலுற்றுப் பலகாலும் கல்வியின் நலத்தை எடுத்து அவளுக்குரைப்பான்.

'ஒருவற்கு அழிவில்லாத சிறந்த செல்வமாவது கல்வி. மற்றைப் பொருட்செல்வம் போல இது தாயத்தார், கள்வர், அரசர் என்றிவர்களால் வௌவப்படாதது; பிறர்க்குக் கொடுப்பதாற் குறைபடாதது; தீ முதலியவற்றால் அழியாதது இக்கல்விதான், தோண்டியவளவு நீரூறும் மணற்கேணியைப்போல, எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் கற்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவனறிவை வளர்த்து மிகுவிக்கும். கற்றவர்க்கு இதுதான் தம்மூர், இதுதான் தந்நாடு என்பதன்றி எந்நாடும் நாடாம், எவ்வூரும் ஊராம். அன்றியும்,

> தாயின் புறுவ துலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்.

குலம் செல்வம் முதலியவற்றால் எத்துணைப் பெரியவராயிருப்பினும் கல்லாதவரை உலகம் மதியாது. ஒண்ணூல் பலகற்று நுண்ணறிவு வாய்க்கப்பெறாதவனுடைய எழினலம் மண்மாண் புனைபாவையின் அழகைப்போலுமன்றே" என்று அடிக்கடி அவன்கூறக் கேட்ட தலைவி அவன் உள்ளக்கருத்தை உணராது ஒருநாள் "ஆம், ஐய; மைந்தர்க்குக் கல்வியினுஞ் சிறந்த தொன்றுண்டோ?

> குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
> மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
> நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்
> கல்வி அழகே அழகு.

என்பதற்கு ஐயமுண்டோ? பல துறைகளிலும் நுழைந்து பல நூல்களையுங் கற்றுப் பார்த்த உமது கல்வியின் நலத்தையும், அறிவின் நுண்மையையும், புத்தியின் விசாலத்தையும் பல சமயங்களிலும் கண்டு மகிழ்ந்த நான், இவ்வின்பத்தை உம்மோடு ஒக்கவுண்டு அனுபவிப்பதற்கு வேண்டிய கல்வியைப் பெற்றிலேனே என்று பலகாலும் சற்று வருந்தியதுண்டு. புதிது புதிதாக ஒவ்வொரு விஷயத்தை ஒவ்வொரு நாளுமெடுத்துத் தாம் பேசும்போது அதிலே ஈடுபட்டுப் போனணர்தமுற்ற நான் என்றேனுமொருநாள் யாதானுமொரு காரணத்தால் அவ்வின்பத்தை அனுபவிக்கப் பெறாவிடின் அந்நாள் எனக்கு அவநாளாகவே தோன்றும்; பெருந்துக்கத்தை விளைக்கும் அதனாலன்றோ நான் ஒருபகலும் உம்மைப் பிரியத் தரியாதவளாக இருக்கின்றேன்." என்றாள். அவளுரைத்த அம்மாற்றம் தான் கூறப்புகுந்த விஷயத்துக்கு முற்றிலும் விரோதமாக முடியக்கண்ட தலைமகன்சிலநாள் அதைப்பற்றிப்பேசாது சும்மாவிருந்து பிறகு தானே நேரிற்சொல்வதைக் காட்டிலும் தோழியைக்கொண்டு அவளுக்கு அதை உணர்த்துவதே உசிதமெனக்கொண்டான்.

அவ்வாறே அவன் ஒருநாள் தோழியையுற்றுக் கல்வியின் இன்றியமையாத் தன்மையை அவளுக்கும் எடுத்துரைத்து,

> தானே அருங்கலை தந்தவன் சங்கப்
>   பலகையின்கீழ்,
> மானே, பதங்கள் வருந்தமுன் நின்றதும்,
>   வாய்த்தசெஞ்சொல்
> தேனே, அருட்பொருள் தேர்ந்ததும், பாணர்பின்
>   சென்றதுவும்
> கானே கமழ்கொன்றை யானறி வோர்தரம்
>   காட்டுதற்கே.

என்று கற்றறிந்தார் பெருமையையும் எடுத்துக்காட்டி, தான் அக்கல்வி காரணமாகப் பிரியலுற்றதை அவளுக்குணர்த்தி, தக்க சமயம் பார்த்துத் தலைவிக்கு அதனைத் தெரிவித்து அவளைத் தன்செலவுக்கு உடன்படுத்துமாறு வேண்டினான். தலைமகள் இந்நெடும் பிரிவைச் சிறிதும் ஆற்றாளென நன்றுணர்ந்த பாங்கி அவ்வெண்ணத்தை அவன் மனத்தினின்றும் பேர்க்க முந்தி நெடிது முயன்று பின்பு அவன் தக்கதே செய்ய நினைந்தான் என்றுதேறி அவன் விரும்பியவண்ணம் செய்ய ஒருப்பட்டாள்.

ஒருப்பட்ட பாங்கி செவ்விபார்த்துத் தலைவிக்குக் கொஞ்சங் கொஞ்சமாக அவன் கருத்தைத் தெரிவித்து, அவன் நெடிது தாழ்க்காது கடிது மீள்வானென்றுங் கூற, அவளும்

> பிரியா மையுமுயிர் ஒன்றா வதும்பிரி
>   யிற்பெரிதும்
> தரியா மையுமொருங் கேநின்று சாற்றினர்,
>   தையல்மெய்யிற்
> பிரியா மைசெய்து நின்றோன்தில் லைப்பேரியல்
>   வளார் அன்ன
> புரியா மையுமிது வேஇனி என்நாம்
>   புகல்வதுவே

என்று ஒருவாறு இசைந்தாள். அதைச் சென்று பாங்கி அவனுக்கு அறிவிக்க, அவனும் அதுவே புகுமுகமாகத் தலைவிக்குத் தன்செலவை உணர்த்திப் பலவாறு அவளைத் தேற்றி, அவளைக்கொண்டே தனக்காகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்து, தான் மீண்டுவரும் பருவத்தையுங் குறிப்பிட்டு, நல்ல நாளிலே, அவளிடம் விடைபெற்றுப் புறப்பட்டான். போவதற்குமுந்தி அவன் மறுபடியும் தோழியைத் தனித்தழைத்துத் தான் வருந்துணையும் சிறிதும் வருந்தாது தலைவியை ஆற்றுவித்துப் போற்றியிருக்கும்படி வற்புறுத்திச் சேணகன்றான்.

இவ்வாறு சேயிடைச் சென்ற தலைமகன் வரவு தாழ்த்துப் பிரிவு நீடித்தவழி தலைவி, சென்ற தேயத்து அவனுக்கு யாதுநிகழுமோ என்றும், அவன் என்ஞான்று வருமோவென்றும் கவலை நீங்கா மனத்தினளாய், அகத்து நிகழும் விரகவேதனையைப் புறத்து நிகழும் யாழிசை, மணியோசை, மாலை, மதி, தென்றல் இவை வந்து மேன்மேலும் வளர்க்கப் பிரிவாற்றாது பெருந்துயருற்று எல்லியும் பகலும் இடைவிடாது கண்கலுழ்ந்து வருந்தாநிற்பத் தோழி அவளைச் சமாதானப்படுத்திப் பலவாறு தேற்ற அரிதின் ஆற்றியிருந்தாள்.

K. இராமரத்நம் ஐயர்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

8. வேள்விப் படலம்.

(893-ம் பக்கத் தொடர்ச்சி.)

கோசிகன் கூற்றுத் தனக்கே யாகும்.

இன்னவாறு மாவலி மன்னனது சரிதத்தைக் கோசிகன் இராமனுக்குக் கூறிமுடித்துக் கற்புடைய மங்கைமார் சிந்தைபோலத் தூயதும் செங்கண்மால் முன்னாள் இருந்து தவம் செய்ததுமாகிய அந்தச் சித்தாசரமத்தையே தன்னுடைய வேள்விக்கு ஏற்ற இடமெனத் தேர்ந்து வேண்டுவகொண்டு அக்குமாரரைக் காவலேவி நினைத்த வேள்வியைத் தொடங்கினான்.

> எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
> விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
> மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
> கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர்.

[பூமியைக்காக்கும் தயாதன் புத்திரர்கள், எண்ணுவதற்கும் செய்வதற்கும் அரியதோர் வகையில், விச்வாமித்திரன் தேவர்களைக் குறித்துச் செய்த யாகத்தை, ஆறுநாட்கள், கண்ணைக் காக்கின்ற இமையைப்போல் காத்தனர்.]

கண்களுக்குத் தீங்கொன்றும் வராமல் இமைகள் காக்கின்ற வண்ணம் இராம இலக்குமணர்கள் யாகத்தைக் காத்தனர் என்றமட்டில் ஈற்றடியிலுள்ள உவமைமணத்தை அனுபவிப்பதல்லாமல், அவ்வுவமையினைக் கசக்கிப்பிழிந்து பொருள் கொள்வதினால் ஊதியம் இல்லை. பாண்டிய மன்னனோடு இகல்கொண்ட கம்பர் சூளுரைத்து மாறுவேடத்தோடு சோழவேந்தனுக்கு அடைப்பத்தொழில்புரிந்திருந்தபோது, அவ்வவைக்கண் அமர்ந்த சில புலவர்கள் கம்பராமாயணத்தின் இப்பாகத்தை எடுத்து உபந்நியாசம் செய்தனரென்றும், அச்சமயம் இச்செய்யுளிற்கு அன்னவர் இயற்கையாய்க் கண்ட பொருள் சிறக்கவில்லை என்று அடப்பைக்காரனாய் அருகிருந்த கம்பர், தான் கம்பரிடம் இதன் பொருளை அகலமாகக் கேட்டிருப்பதாகப் பாவித்து விளக்குபவராய்,

"மேலிமை கீழிமை என்னும் கண்ணிமை இரண்டில் மேலிமை பெரியது, கீழிமை சிறியது. அன்றியும் மேலிமை அசைந்துகொண்டிருப்பது, கீழிமை அசையாது நிற்பது. மேலிமைபோலப் பெரியவனாகிய இராமன் நிலை பெயர்ந்து கௌசிக முனி ஆச்ரமத்தின் நாற்றிசையிலும் இராக்கதர்கள் வந்து உபத்திரவஞ் செல்யாமலிருக்கும்பொருட்டுச் சக்கரம் சுற்றுவதுபோலச் சுற்றித் திரிந்து காவல் செய்தான். கீழிமைபோல இளையவனாகிய இலக்குவன் உள்ளே ஒருவரும் புகாதிருக்கும்பொருட்டு ஆச்ரமத்தின் வாசலில் அசையாது நின்றபடி காவல் செய்தான். இவ்விதமாகக் காவல் செய்யும் அவ்விருவரில் இராமன் ஆச்ரமத்தின் புறத்தில் சுற்றிவரும் போதெல்லாம் மேலிமை கீழிமையை இமைத்திமைத்துத் தீண்டுவதுபோல வாயிலிலிருக்கின்ற இலக்குவனைக் கையினால் அடிக்கடி தட்டித் தட்டி 'இலக்குமணா சாக்கிரதை' எனச் சரித்துக்கொண்டே வந்தானென்றும் கூறும் பொருள் சிறந்திருத்தலைக் காண்க"

என்று எடுத்துக்காட்டினாரென்றும் ஒரு உலக அபவாதம் நிலவிவருகின்றது. கம்பர் பெருமைக்குக் கண்ணெச்சில் கழிக்க நினைத்த யாரோவொரு சிறந்த புத்திமான் இந்தக் கதையைக் கட்டிவிட்டிருத்தல்வேண்டும். மற்று இப்பொருள் கம்பர் கூறினார் என்பது உண்மையாயின் சோழன் அவையமர்ந்த புலவர்கள் மற்றச் செய்யுள்களுக்குப் பொருந்தாவகையில் சில 'நயங்கள்' காட்டப்புகுந்து உழல்வதைப்பற்றி விகடமாகத் தானும் இதனைக் கூறி அவர்கள் அதை நிசமென்று ஏற்றுக்கொள்வதைக் காணும் பரிகாசச் சிந்தையால் செப்ப நேர்ந்திருத்தலேனும் வேண்டும். சக்கரம் சுற்றுவதுபோல் ஒருவன் மேலிமை ஊரெல்லாம் திரிந்துவந்தால் வெகு நன்றாக இருக்கும்! இதனைவிட அவ்விமை மேலுங்கீழுமாய் அசைவதுபோல் இராமன் இலக்குமணனுக்கு எதிரே நின்று 'சாக்கிரதை சாக்கிரதை' என்று அவனைத் தட்டித்தட்டிக் குதித்துக்கொண்டிருந்தான் என்று கம்பர் கூறியதாகச் சொல்வோமானால் தன் உவமையின் பொருத்தத்தை அவர் பின்னும் நுணுக்கமாகக் காணும்படி செய்துவைப்பவ ராவோம்.

மூவிரு தினங்கள் இவ்வாறு கழிந்தபின் மூத்தவன் முனியை நண்ணித் "தீத்தொழில் இயற்றுபவர் என்று நீ சொன்ன தீயவர் என்று வருவர்" என்று வினவ, அம்முனிவன் தீக்கையில் இருந்ததால் மௌனியாய்ப் பதில் உரைத்திலன். ஆயினும் சிறிது போதினில் கார்கால மேகம்போல் அரக்கர்கள் விசும்பில் அடர்ந்து இடியும் அஞ்சும்படி ஆரவாரஞ்செய்து, பாணங்களை எய்தனர், குந்தம் முதலியவைகளை எறிந்தனர், நெருப்பும் நீருமாய்ச் சொரிந்தனர். திட்டினர், அதட்டினர், மழுக்களை வீசினார். இன்னபடி அவர் செய்த கொடியமாயங்கள் எண்ணிறந்தன. கடலே எழுந்து ஆகாயத்தை மறைத்தது போல் படர்ந்த இவ்வரக்கர்சேனை எய்த சரங்கள் ஊழியில் பெய்யும் மாரிபோல் அக்கானகத்தை மறைத்தது. பிளந்த பற்களையுடையவர். அதுக்கிய வாயினர். செந்நிறத் தலைமயிரை உடையவர், தீப்போல் சுழல்கின்ற கண்களை உடையவர், இவர்களை இராமன் இலக்குமணனுக்குக் காட்டி, "முனிவன் கூறிய கொடியவர் இவர்களே" என்று செப்பியவுடன் இலக்குவன் கண்கள் தீப்பொழிய அவர்களைப் பார்த்துத் தன் கைவில்லையும் பார்த்தவனாய், "அண்டர் நாயக, இவர்களைத் துண்டித்துண்டித்துத் தள்ளுகின்றேன், பார் இனி" என்றுபோர் தொடங்க, இரத்தமும் தசையும் ஓமத்தீயில் விழுமென்று இராமன் தனது பாணங்களால் அவ்விடத்திற்குப் பந்தலொன்று இட்டுவைத்தான். அப்பொழுது, பாற்கடல் கடைந்தகாலத்தில் கொடிய விடம் தோன்றி அழிக்க வந்த அச்சமயம் சிவபிரானை அடைந்த தேவர்களைப் போல், அரக்கரைக்கண்ட முனிவர்கள் வெருவி, "அஞ்சன வண்ணனே நின் அபயம்" என்று இராமன்பால் தஞ்சம் புகுந்தனர். இராமனும் அவர்களைத் தேற்றிக் காதளவு நாணிழுத்துப் பாணங்கள் தொடுக்கவும், கணப்பொழுதில் தரையெலாம் இரத்தக் கடலாயிற்று. அற்று வீழ்ந்த அரக்கர்தலை குன்றுபோல் குவிந்து வளர்ந்தது. இராமபிரான் எய்த மாகவாஸ்திரம் தாடகையின் புத்திரர்களில் ஒருவனாகிய மாரீசனைத் தூக்கிக் கொண்டுபோய்க் கடலில்இட்டது. மற்றப் புதல்வனாகிய சுவாகுவை இராமன் ஆக்கிநேயாஸ்திரம் ஏவிக் கொன்று தொலைத்தனன். இதற்குள் அரக்கரின் தலை

யால் குவிந்தமலை வானளவு வளர்ந்து விட்டதால், இராக்கதர்கள், "இக்குமரர் இதன் வழி ஏறிவந்து விரைவினில்நம்மையும் பிடித்துக் கொல்வார்" என்ன ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு ஓடத் தலைப்பட்டனர். ஓடின இவர்களை இராமபாணங்கள் இடிபோல் தொடர்ந்து அழித்தன. தலையற்ற கவந்தங்கள் கூத்தாடப் பேய்கள் வீரனது புகழைப் பாடக் கழுகு முதலிய பறவைகள் பந்தலிட்டன. அப்பந்தலும் கிழித்து விண்ணவர் பூமழை சொரிந்தனர். அந்தா துந்துபி மேகம் நிகர்க்க முழங்கியது. இந்திரன் முதலிய தேவர்கள் வந்து இராமனைத் தொழுது போயினர். பின்,

புனித மாதவ ராசியின் பூமழை பொழிந்தார்
அனைய கானத்து மரங்களு மலர்மழை சொரிந்த
முனியு மவ்வழி வேள்வியை முறைமையின் முற்றி
இனிய சிந்தையி னிராமனுக் கினையன விசைத்தான்

[தூய தவவரர்களும் ஆசிகூறி மலர்களைத் தூவினர். அவ்வனத்திருந்த மரங்களும் மலர்மழை சொரிந்தன. கோசிகனும் தன்யாகத்தை முறைப்படி முடித்து உவந்த சிந்தையனாய் இராமனுக்கு உபசார வார்த்தைகள் கூறினான்]

"இனையன கூறினன்." என்னுமித் தொடரிற்கு "இவைகளைக்கூறினன்" என்று பின்வரும் செய்யுளைக் குறிக்கும் பொருள் கொள்ளாமல், இனைதல் என்பதற்குப் 'பரிந்து இரங்குதல்' என்றிருக்கும் மற்றொரு பொருளை ஏற்றுக்கொண்டு, இராமன் தன்பொருட்டுப் பட்ட சிரமத்தைப்பாராட்டி முனிவன் அவனுக்கு உபசாரவார்த்தைகள் மொழிந்தனன் எனக் கருதுவதே தகும். அடுத்த செய்யுளில் வரும் சொற்கள் கோசிகன் தனக்குள்ளேயே அகமார்க்கமாய்க் கூறிக்கொண்டவை. அவை இராமனுக்குக் கூறியன வல்ல. எனவே, இனையன அவன் இயம்பியவை எவையென்று இப்பாசுரத்தில் குறிக்கப்பெற்றில. "இராம, பரியும் கரியும் தேரும் ஊர்வதல்லால் நடந்தறியா நீ என்பொருட்டு வனமெலாம் கடந்து வந்தனை. நனி நொந்ததோ உன் பாதம்! மாயப்போர் வல்ல இப்பெருவலி அரக்கரை நலிந்த நின் தோள்கள் பெரிதும் வருந்தி இருத்தல் வேண்டும். இத்துணை வருத்தம் நினக்குத் தந்த என்னைப் பொறுத்தருள்வாய். நின் தந்தை மொழியையும் என் வேள்வியையும் பழுதின்றிச் செம்மையிற் காத்த வீர, உன்துணை மேன்மையோர் இவ்வுலகில் யாரே, உளர்!" என்று இன்னபல தன்மையவாய்க் கோசிகன் மொழிகள் அமைந்திருக்குமென எண்ணல் அருமை யன்று. தயாத புத்திரனன்றிப் பிறிதொருவன் அல்லன் இராமன் எனும் சங்கேதப்படி விச்வாமித்திரன் இவ்வார்த்தைகளை விளம்பினன் ஆனபோதிலும், தன் வரையில் தயாதன் மதலை திருமாலென்பது தெளிந்துளான் ஆதலால், வெளிப்படையாக இராமனுக்கு உபசாரணைகள் இயம்பிய பின், தன்னுளே,

பாக்கி யம்மெனக் குளதென நினைவுறும் பான்மை
போக்கி நிற்கிது பொருளென வுணர்கிலேன் புவனம்
ஆக்கி மற்றவை யகிலமு மணிவயிற் றடக்கிக்
காக்கு நீயொரு வேள்விகாத் தனையெனுங் கருத்தே,

[உலகெலாம் படைத்து அவையனைத்தையும் உன் அழகிய வயிற்றில் அடக்கிக் காத்த நீ ஒரு வேள்வியைக் காத்ததைப் பெருங்காரியமாகக் கருதலாகுமோ! ஆதலால், நீயே வந்து என் வேள்விக்கு அருள்புரிவதற்கொத்த பாக்கியம் யான் பெற்றிருப்பதைப்பற்றி நினைப்பதைவிட்டு இது உனக்கொரு பொருளென மதித்துப் பாராட்டுகின்றேன் அல்லேன்]

என்று அகமகிழ்ந்து கொண்டாடிக் கொள்கின்றான். இவ்வாறன்றிக்கோசிகன் அவ்வுரைகளை இராமனுக்கு நேராகக் கூறியதாக உரைகண்டக்கால் நாடக ஒற்றுமை பிறழ்ந்து போகும். இல்லையெனில், சர்வஞ்ஞனாகிய செங்கண்மால் வழிமுழுவதும் முனிவனை, 'யாவது இது' என வினவுவதும், அதற்கவன் விரித்துரைப்பதும் வெள்ளையினும் வெள்ளையான வார்த்தைகளாய்ச் சுவையின்றி நின்று கெடும். இதுபற்றி முன், காமன் ஆசிரமத்தைக் குறித்து விச்வாமித்திரன் இராமனுக்குக் கூறிய மொழிகளில், "ஆரணத்துறையுளாய்" என்ற வாசகத்தை விளித்தலாகக் கொள்ளாது, மன்மதன் விண்ணவர் பொருட்டுத் தன்னையே துறந்துமாய்ந்த தத்துவத்தைக் குறிப்பதாக உரைபடும்படி விளக்க நேர்ந்தது. "நெடுமால் நீயே என்பது எனக்குத்தெரியும்" என்று விச்வாமித்திரன் மறைத்தலின்றி விளம்பிவிட்டபின், மாவலியின் கதையைப்போய் இராமனுக்குக் கொல்லர் தெருவில் ஊசி விற்பதுபோல், வழங்குவது நாடக நவிற்சிக்கு இழுக்குடைத்தாம். "இலைகுலாந் துழாய்முடி யேக நாயகன், சிலைகுலாந் தோளினாய், சிறியன் சாலவே" என்பதனின் உள்ளுறைந்து உலவும் நகைச்சுவைக் கப்புறம் இடமேது! இம் மாவலியின் சரிதத்தைக்கூறி முடிப்பானாய்க் கோசிகன்,

ஆதலா லருவினை யறுக்கு மாரிய
காதலாற் கண்கடவர் பிறவி காண்குறார்
வேதநூன் முறைமையால் வேள்வி முற்றுவேற்
கீதலா தில்லைவே றிருக்கற் பாலதே.

[ஆதலால், மேன்மகனே, இச்சோலை அரிய வினைகளை நீக்கும். இதனைப் பக்தியோடு கண்டவர் பிறகு பிறவியைக் காணமாட்டார். வேதவிதிப்படி வேள்வியை முடிக்க நினைத்த எனக்கு இருக்கத் தகுந்த இடம் இவ்வாச்சிரமம் அல்லாது வேறு இல்லை]

என்று செப்பிய செய்யுளிலும், 'அறுக்கும்' என்பதைப் பெயரெச்சமாக 'ஆரிய' என்னும் விளியோடு முடிக்காமல், முற்றுவினையாக ஏற்பதே நலமாம். அல்லாக்கால் இராமனது பரத்துவத்தைச்செப்பி அவனை அழைத்ததாக ஏற்படும். இவ்வாறே பின் அகலிகையின் வரலாற்றைக்கூறி முடிக்கும்போது,

இவ்வண்ண நிகழ்ந்த வண்ணம்
 இனியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர்
 துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரில்
 மழைவண்ணத் தண்ணலே யுன்
கைவண்ண மங்குக் கண்டேன்
 கால்வண்ண மிங்குக் கண்டேன்

என விச்வாமித்திரன் புகழ்ந்ததும், "இனி இந்த உலகுக்கு எல்லாம் உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர் வண்ணம் உறுவதுண்டோ" என்னும் சொற்களால் இராமனது பரத்துவத்தை மறைவின்றிப் பாராட்டுவதுபோல் தோன்றினும், இவ்விடத்திலும் இடையே அம் முனிவன் இச்சொற்களைத தனக்குள் சொல்லிக்கொண்டு, "மைவண்ணத்தரக்கி போரில்......" என்று மேலே தொடர்ந்தான் என்று எண்ணுவது பிழையாகாது. அதுவுமல்லாது, "நின்னைப்போன்ற வீரனும் தூய்மையோனும் தோன்றியபின் இவ்வுலகத்தின்கண் இனி யாதும் துயர்தங்கி நில்லாது" என்று நேராகச் சொன்னான் எனினும் அச்சொற்கள் இராமனைக் கோசலைக் குரிசிலாகவே வைத்துப் புகழ்வதற்கும் அமையும். முன்னும் பின்னும் இன்னவாறு வரு

(இதன் தொடர்ச்சி 919-வது பக்கம் பார்க்க.)

64 பக்கம்

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதைச் சந்தா நேயர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகளைக்கொண்டது. மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறந்தது "ஆநந்த விகடனே". "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்பட ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" மாதிரி காபி இனும். டெலிபோன் நெ. 3311.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி

என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மா நாடு இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. 400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. 1-8-0 (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனும்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொறுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆரூதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	8
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினன்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனும்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,

மங்கமாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்
பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி - இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத்
திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில்-தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture
by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.

(916-வது பக்கத் தொடர்ச்சி.)

மிடங்களில் கோசிகன் இராமனைச் செங்கண்மா லென்று அழைத்திலன் என்று அமைதி காட்டற்கு இயல்கின்றதாதலால், கம்பர்தம் நாடக நினைவைக் காக்கும் வண்ணம் இவ்விடத்திலும் "பாக்கியம் எனக்குளதெனும் பான்மைபோக்கி" என வரும் செய்யுள் கோசிகன் அகமார்க்கமாய்க் (aside) கூறிய தென்று கருத நேர்கின்றது.

ஆயினும்,

என்று கூறிய பின்னரவ் வெழில்மலர்க் கானத்
தன்று தானுறைந் தருந்தவ முனிவரோ டிருந்த
குன்று போற்குணத் தானெதிர் கோசலைக் குரிசில்
இன்று யான்செயும் பணியென்கொல் பணியென
[விசைத்தான்.

[என்று கூறிய பிறகு, அவ்வழகிய மலர்களையுடைய வனத்தில் அன்று முனிவர்களோடு தங்கியிருந்த விச்வா மித்திரன் எதிரே இராமன்வந்து, "இன்றைக்கு யான் செய்யவேண்டிய காரியம் யாதென விதித்தருள்வாய்" என்று சொன்னான்.]

எனவரும் அடுத்த செய்யுளைத் துவக்குகின்ற "என்று கூறிய பின்னர்" என்னும் சொற்கள் முன் உரைத்த கருத்திற்கு மாறுபட்டு நிற்பனபோல் தோன்றுவ தியற்கையே. ஆனால் அச்செய்யுளிலேயே பின் வரும் விடயத்தை நோக்குங்கால் இதனிற்கும் அமைதி காணவேண்டியது முன்னினும் அதிக அவசிய மாகின்றது. "புவனம் ஆக்கி மற்றவை அகிலமும் மணி வயிற்றடக்கி உலகங்காத்த பரந்தாமா" என்று தன்னை வாய்விட்டழைத்த விச்வாமித்திரனிடத்தில் இராமன் மீண்டும் வந்து "இன்று யான் செயும் பணி என் கொல், பணித்தி" எனநிற்றல் கருமமுமன்று, விளை யாட்டுமன்று—வம்பேயாகும். ஆதலின், "என்று கூறிய பின்னர்" என்பதற்கு "என்று இராமனுக்குச் சொல்லிய பிறகு" என்னும் பொருள் அமையாது. மற்று இரு விதத்தில் அதற்குப் பொருள் அமையக்கூறலாம்.

"என்று கருத்துட்கொண்டு இராமனுக்கு இனையன கூறியபின்னர்" என்பது ஒன்று. மற்று, முன்பாசுரத் தில், "பாக்கியம் எனக்கு உளது எனும் பான்மை போக்கி, நிற்கு இது பொருள் என உணர்கிலென்" என்ற வரையில் கோசிகன் இராமனுக்கு நேராகச் சொன்னதாகவும், பின் தொடர்வன தனக்குள் சொல் லிக்கொண்டனவாகவும் பிரித்து, இச்செய்யுளில் காணும் "என்று கூறியபின்னர்" என்னும் சொற்கள் அம் முன்னதைக் குறிப்பதாகக் கொள்ளினும் கொள்ளலாம்.

இவ்வாறு அமைத்துக்கொள்வதற்குக், கோசிகன் கூறு கின்ற மறுமொழியும் ஆதாரமாயிருக்கின்றது. "இன்று யான் செய்யும் பணி யாது?" என்று பணிவுடன் கேட்ட மைந்தனை நோக்கிக் கோசிகன்,

அரிய யான்சொலி னையநிற் கரியதொன் றில்லை
பெரிய காரிய முளவவை முடிப்பது பின்னர்
விரியும் வார்புனன் மருதஞ்சூழ் மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியுங் காண்டுநா மெழுகென்று போனார்.

[ஐயனே, எவ்வளவு அரியதென்று யான் கருதிக் கூறினாலும் அதனை நீ எளிதில் முடித்து விடுவாய். நீ செய்யவேண்டிய பெரிய காரியங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளை முடிப்பதற்குக் காலம் பிறகு நேரும். இப்பொழுது, நீர்பாந்து திகழும் மருத நிலங்கள் சூழ்ந்த மிதிலைக்கரசன் ஜனகன் செய்கின்ற யாகத்தையும் போய்ப் பார்ப்போம், புறப்படு" என்று போனார்]

உலகமுண்ட பெருமானை நோக்கி, "நினக்கு அரிய தொன் றில்லை" என விச்வாமித்திரன் விளம்புவது மிகை. முழுவதும் முன்னத்தால் தம்முள்ளே நிகழ் கின்ற வாசகங்களாக இவை பொருந்துமே யல்லாது வெளிப்படையாய்ப் பேசியபின் குறிப்புணர்த்தப் புகு வது பொருத்த முடைத்தன்று. ஓதுவோர் நாடக வுணர்ச்சி நிலைதடுமாறித் திகைக்கும். அது நோாது காக்கும் வகை உளதாயின் அவ்வகையிற் பொருள் காணல் சிறப்புடைத் தென்னுங் கொள்கையே தக்கது.

வர்த்தமானம்.

திண்டுக்கல்லுக்கும் பொள்ளாச்சிக்கு மிடையில் புதிய புகையிரதப் பாதை வேலை முடிந்து இந்த மாதம் 19-ம் தேதி பிரயாணிகள் போக்கு வரத்துக்குத் திறக்கப்படும். 20-ம் தேதி மதுரை போடிநாயக்கனூர்ப் பாதை திறக் கப்படும்.

***

ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரி தென் ஆப்பிரிக்காவில் இந்திய கவர்ன்மெண்டு ஏசெண்டு பதவியை நிர்வகிக்கும் இடத்தில் சென்னை கவர்ன்மெண்டில் மந்திரியாய் இருந்த சர். கே. வி. ரெட்டியை நியமனம் செய்ய விருப்பதாக வதந்தி நிகழுகிறது.

***

இந்திய மந்திரியாய் இருந்த லார்ட் பார்க்கின்ஹெட் என்பவர் இம்பீரியல் கெமிக்கல்ஸ்என்னும் கம்பெனியில் டைரக்டராகச் சேர்ந்திருக்கிறார். வைசிராயாயிருந்த லார்ட் ரெடிங் என்பவரும் இந்தக் கம்பெனியில் சேர்ந் திருக்கிறார்.

***

ஆவடியில் டாக்டர் லக்ஷ்மிபதியால் ஸ்தாபிக்கப்பட் டிருக்கும் ஆரோக்கிய ஆசிரமத்துக்குச் சைதாப்பேட்டை தாலுக்கா போர்டிலிருந்து வருஷா வருஷம் 500 ரூ. ஒரு ஆயுர்வேத மருந்துச் சாலைக்காக கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள்.

***

கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷனில் சென்ற வாரம் ஒரு பிரயாணி வண்டிக்காக மேடையில் காத்துக் கொண்டிருக்கையில் அவனுடைய பை ஒன்று திருட்டுப் போய்விட்டது. இதில் 600 ரூபா பெறும்படியான சாமான்கள் இருந்தனவாம். போலீசார் விசாரணை செய் துவருகின்றனர்.

***

இந்திய (ஓரியெண்டல்) கீழ் நாட்டுச் சங்கம் இந்த வருடம் லாகூரில் 19-ம் தேதி கூடவிருக்கிறது. ஸ்ரீமான் டாக்டர் எஸ். கிருஷ்ணசுவாமி ஐயங்கார், சென்னையிலிருந்து சர்வகலாசாலைப் பிரதிநிதியாகப் போகின்றார். அவர் இந்தச் சங்கத்துக்குக் காரியதரிசி களில் ஒருவராயிருப்பதால் சீக்கிரத்தில் லாகூருக்குப் போவார். இவர் வழியில் இருக்கும் பிரதானமான புராதன நகரங்களையும் பார்த்து வரும்படி சர்வகலா சாலையார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

***

பர்தோலி குடிகளின் கஷ்டங்களை விசாரணை செய்வ தற்காக ஏற்பட்ட கமிட்டியார் அவர்கள் ரிப்போட்டை வெளியிட்டிருக்கிறார்கள். இதில் கவர்ன்மெண்டு வரி வசூலிப்பதற்கு வேண்டிய அளவுக்குமேல் நீஷ்டூரமான வழி வகைகளைக் கையாடினார்கள் என்றும், மற்றச் சீர் திருத்தமடைந்த தேசங்களில் நடைபெறுகின்ற மாதிரி யான நிலவரி வசூல்செய்யும் முறைக்கு இந்தத்தேசத்தில் நடைபெறுகின்ற முறை ஒத்துவர வேண்டுமென்றும் இந்த விஷயத்தைப்பற்றிச் சிவில் கோர்ட்டுகளுக்கு அப் பீல் செய்யும் உரிமையும் இருக்கவேண்டுமென்றும் கண்டிருக்கின்றார்கள்.

***

ஸ்ரீமான் S. ஸ்ரீநிவாச ஐயங்கார் வரவேற்புக்காகப் பம் பாயில் ஜம்னுதாஸ் மேதா என்பவர் கிரகத்தில் ஒரு கூட்டம் கூடியது. அங்கே இந்தியாவுக்குச் சுயேச்சை வேண்டியது என்னும் அபிப்பிராயமுள்ள அனேகர் சேர்ந்திருந்தார்கள். ஐயங்காரவர்கள் உலகத்தில் இன் னொரு அரசாங்கத்துக்குக் கீழ்பட்ட ஒரு தேசத்தாரா வது முழுச்சுயேச்சையைத் தவிர வேறொன்றையும் விரும்பிக் கிளர்ச்சி செய்யவில்லை யென்றும் இந்தி யாவும் அவ்விதமே செய்வதுதான் முறை என்றும் பம்பாயிலுள்ள தனவந்தர்களா யிருப்பவர்கள் இந்தக் கிளர்ச்சிக்குப் பண உதவி செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

அதே சமயத்தில் பம்பாயில் மற்றொரு இடத்தில் டாக்டர் பெஸண்டு இந்தியாவுக்கு வேண்டியது குடி யேற்ற நாடுகளின் ஸ்திதி யென்று பிரசங்கம் செய் தார்.

189029

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)